# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 8
செய்தி 3
செப்டம்பர் 2021
விலை ரூ 10/-



21.08.2021 அன்று
தலைமைச் செயலகத்தில்
மின்ஊழியர்களிடமிருந்து
பிடித்தம் செய்யப்பட்ட
கொரோனா நிவாரண நிதியான
10 கோடியே 58 இலட்சத்து
84 ஆயிரத்து
597 ரூபாய்க்கான
காசோலையை மாண்புமிகு
முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்
அவர்களிடம் வழங்கப்பட்டது



மின்சார சட்டத்திருத்த மசோதா 2021 – ஐ
நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என
கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றிய
தீர்மான நகலை முதல்வரிடம்
மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர்
அளித்து தமிழக சட்டமன்றத்தில்
தீர்மானத்தை நிறைவேற்ற
கேட்டுக்கொண்டார்.





24.08.2021 அன்று
மின்வாரிய தலைமையகத்தில் மின்னகத்தை அபிவிருத்தி செய்வது, மின்நுகர்வோர்களின்
குறைகள் பற்றி மின்துறை அமைச்சர் அவர்கள் மின்வாரிய தொழிற் சங்கத் தலைவர்களை
சந்தித்து ஆலோசனைகளை கேட்டறிந்தார்

# 17.08.2021 அன்று மாநிலம் முழுவதும் ஒப்பந்த ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்
















உ

# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**செப்டம்பர் 2021**


**உள்ளே....**


- ★ எங்கள் தேசம் விற்பனைக்கு அல்ல
- ★ மின்ஊழியர்களை பொது மக்கள் மத்தியில் வில்லனாக காண்பிக்காதே
- ★ சானையாளர் சி.ஜி
- ★ தகைசால் விருது என்.எஸ்
- ★ அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்
- ★ மின்வாரியம் மறுசீரமைப்பும் பஞ்சப்படியும்
- ★ பாரதி நூற்றாண்டு நினைவு தினம்
- ★ திருக்கோயில்கள் ஏலம்
- ★ கேங்மேன் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்
- ★ ஒப்பந்த ஊழியர்கள் போராட்டம்
- ★ வாரியத் தலைவருடன் பேச்சு வார்த்தை



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# எங்கள் தேசம்! விற்பனைக்கு அல்ல!!

சுதந்திரத்தின் சுவாசக் காற்றை சுவாசித்து 74 ஆண்டுகள் கடந்த நிலையில் பவள விழா கொண்டாடும் இந்த தருணத்தில் தேசத்தின் கோயில்கள் என்ற பொதுத்துறைகளை சூறையாட ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் ஒரு பொதுத்துறை நிறுவனங்களை கூட உருவாக்காத ஒன்றிய பி.ஜே.பி. அரசு, ஒன்றிய அரசின் கஜானவிற்கு ரூ. 6 லட்சம் கோடி நிதியை திரட்ட பொதுத்துறைகள் விற்கவும், குத்தகை விடவும் முடிவு செய்து இருப்பது அவமானகரமான செயல்

மண்ணிலின் பங்குகளை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பா ரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியா ரோ?

என்ற பாரதியின் வரிகளின் பொருளை உணருமா? ஒன்றிய அரசு.

மின்துறையை அம்பானிக்கும், அதானிக்கும் அடகுவைத்து அவர்களிடத்தில் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கி அவர்களை மேலும் செல்வந்தர்களாக ஆக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை இல்லந்தோறும் நமது தோழர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய ஒரு பெருங்கடமை உழைப்பாளி மக்களுக்கு உண்டு.

மின்சார சட்டத்திருத்த மசோதா 2021-க்கான நமது போராட்டம் தொடர வேண்டும். வருகின்ற குளிர்கால கூட்டத் தொடரில் இந்த மசோதாவை நிறைவேற்றிட நயவஞ்சகக் கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. கிராமத்து பழமொழி போல " நரி செத்தாலும் அதன் கண் கோழிக் கூண்டின் மீது தான் இருக்கும்" என்பது போல மோடி அரசு தொழிலாளி வர்க்கம் போராடி தடுத்து நிறுத்தினாலும் அவர்களது கபட நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றாமல் இருக்க மாட்டார்கள். இந்திய நாடு முழுவதும் அனைத்து பகுதி ஊழியர்களையும் ஒன்றிணைத்து போராட வேண்டிய நடவடிக்கை மோடி அரசாங்கம் உருவாக்கித் தந்துள்ளது.

லட்சக்கணக்கான இளைஞர்களின் அரசுத்துறையில் வேலை வாய்ப்பும், பறிக்கப்பட்டு விட்டது. பணியில் இருகின்ற ஊழியர்கள் இந்த அரசின் பொதுத்துறைகளை விற்கும் நடவடிக்கையில் மனசோர்வுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தன்று கோட்டையில் சுதந்திரக் கொடியை ஏற்றி கொடிக்கம்பத்தை பராமரிக்க கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைக்க நினைக்கும் கோமளிக் கூட்டம் அல்லவா?

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மக்கள் அரசு என்று சொல்லி அமர்ந்த திமுக அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர் நலன் சார்ந்த எந்த அறிவிப்பும் இல்லை என்பது கவலை அளிக்கிறது. தமிழக நிதி அமைச்சரோ போகிற போக்கில் வழக்கம் போல எல்லோரும் கூறும் காரணத்தை அதாவது அரசின் வருவாயில் பெரும்பகுதி அரசு ஊழியர்களுக்கு சம்பளமாக ஓய்வூதிமாக செல்கிறது என்று சொல்லி விட்டார். அடுத்த சில தினங்களிலேயே பஞ்சப்படியை மேலும் 9 மாதங்களுக்கு வழங்க இயலாது என்றும் 01.04.2022-க்கு பிறகு தான் வழங்க இயலும் எனத் தெரிவித்து விட்டார். பஞ்சப்படி என்பது சமூக நீதியோடு பின்பற்ற வேண்டியது என புதிய வியாக்கியானத்தை கண்டு பிடித்து விட்டார். நிதி அமைச்சரின் அறிவிப்பு அனைவரையும் மனதளவில் சோர்வடையச் செய்துள்ளது. பின்னர் செய்தியாளர்களை சந்திக்கும் போது அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கு மாநில அரசின் வருவாயில் 17 சதவீதம் ஓய்வூதியத்திற்கு 4 சதவீதம் என உண்மையை சொல்லி உள்ளார்.

தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டவைகளை ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த பின்பு நிறைவேற்ற வேண்டிய கடமை தமிழக திமுக அரசிற்கு உண்டு. தொழிலாளி வர்க்கம் போராடி பெற்ற உரிமைகளை எந்த சமரசமும் இன்றி பெற்றுக் கொள்ளும். நிதி நிலையை காரணம் காட்டி தொழிலாளர் நலன் சார்ந்த கோரிக்கை மீது கவனம் செலுத்தாமல் இருப்பது அரசின் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் பணியாளர்களை சோர்வடையவே செய்யும்.

தமிழக முதல்வர் தலையிடுவார் என்ற எதிர்பார்ப்பும்
மின்வாரிய பணியாளர்கள் மத்தியில் உள்ளது.





# அரசு(மின்) ஊழியர்களை பொது மக்கள் முன்னிலையில் வில்லனாக காண்பித்து கதாநாயகனாக காட்டிக்கொள்ளாதீர்கள்!

**- எஸ்.இராஜேந்திரன்**

தமிழகத்தின் நிதியமைச்சர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் கடந்த 9.08.2021 அன்று தமிழகத்தின் நிதிநிலை தொடர்பான வெள்ளை அறிக்கையை வெளியிட்டார். பொதுவாக வெள்ளை அறிக்கை வரவேற்க வேண்டிய விஷயம். இந்த அறிக்கையில் தமிழகத்தின் நிதி பற்றாக்குறை சம்மந்தமாக தமிழக அரசின் கடன்சுமை 5.7 லட்சம் கோடி என்றும், தமிழ்நாட்டின் 69 பொதுத்துறை நிறுவனங்களில் 26 நஷ்டத்தில் இயங்குவதாகவும் தெரிவித்தார். அதனையடுத்து கடந்த 13.08.2021 அன்று தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார்.

நவீன முறையில் 'E' நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதி அமைச்சர் மக்கள் நல அரசு என்ற திமுக அரசை ஆட்சி கட்டிலில் அமர வாக்களித்த அரசு ஊழியர்கள் மின் ஊழியர்கள் என அனைத்து தரப்பினருக்கும், மனச்சோர்வை (முந்தைய ஆட்சியாளர்கள் தந்ததை யே) பரிசாக பட்ஜெட்டிலும் தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக பார்ப்பவர்களுக்கு மின் வாரியமும், போக்குவரத்தும் நஷ்டம் ஏற்படுத் துவதற்காக உருவாக்கப்பட்ட துறை போல தெரியும். நஷ்டம் பணியாளர்களால் ஏற்பட வில்லை.

அரசுகள் அறிவிக்கும் இலவச பயணங்கள், இலவச மின்சாரம் ஆகியவற்றால், காலம் கடந்து கிடைக்கும் மானியத்திற்காக தூக்கி சுமந்து கடனாளியாகும் நிறுவனங்கள் தான் இவை இரண்டும். பஞ்சப்படியை கொரானா நோய் தொற்று காரணமாக ஒன்றிய பிஜேபி அரசு ஜனவரி 2020-ம் ஆண்டு முதல் நிறுத்தி வைத்து, அதன்பின் இந்த ஆண்டு ஜுலை 2021 முதல் வழங்க அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பினை தொடர்ந்து ஒரிஸ்ஸா, பாண்டிச்சேரி, பீகார் உள்ளிட்ட மாநிலங்கள் அகவிலைப்படியை மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கியது.

ஆனால் தமிழக அரசோ அகவிலைப் படியை மேலும் ஒன்பது மாதங்களுக்கு நீட்டித்து 2022 ஏப்ரல் முதல் வழங்கப்படும் என அறிவித்தது. மிகுந்த மன உளச்சலையும், சோர்வையும் அரசு ஊழியர்களுக்கு ஏற்படுத்தி யுள்ளது. ஏறத்தாழ 27 மாதங்கள் பஞ்சப்படியை இழக்க நேரிட்டுள்ளது. ஏற்கனவே சரண்டர் விடுப்பு பறிக்கப்பட்டு விட்டது.

மாநில அரசின் கடனுக்கான காரணத்தை கூறும் பொழுது, கடந்த கால ஆட்சியாளர்களும் தற்போதையை ஆட்சியில் நிதி அமைச்சரும் அரசின் வருவாயில், 90 சதமான நிதி அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கு செலவாகிறது என்று கூறிவருகிறார்கள். ஆனால் பட்ஜெட்டில் ஊதியத்திற்கான செலவினத்தை பற்றி குறிப்பிட மாட்டார்கள்.

தமிழக நிதி அமைச்சர் சட்டசபையில் பட்ஜெட் தாக்கலின் போது அரசு ஊழியர்களுக்கு ஊதியமாக 17 சதவீதமும் ஓய்வூதியமாக 4

சதவீதமும் என மொத்தம் 2 சதம் மட்டுமே செலவாகிறது என்ற உண்மையை சொல்லி விட்டீர்கள். நன்றி நிதி அமைச்சரே! ஆனால் பொது தளத்தில் ஊடகங்களில் அரசின் வருவாயில் 65 சதம் அரசு ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கு செலவாகிறது என்று சொல்வது அநாகரிகமாக இருக்கிறது.

01.04.2003-க்கு பின்பு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை வழங்குவோம் என்று திமுக தனது தேர்தல் அறிக்கையில் கூறி இருந்தது. ஆனால் ஆட்சி கட்டிலில் அமர்ந்த பின்பு இந்த பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்தினால் அரசின் வருவாயில் 90 சதம் அரசு ஊழியர்களுக்கே வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று அதிகார பதவியில் அமர்ந்த பின்பு கூறுவது வாக்களித்தவர்களை ஏமாற்றம் அடைய செய்யும்.

கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் போராடி, போராடி ஓய்ந்து போன ஊழியர்களின் சோகத்தை தீர்த்து வைக்க தேர்தல் காலத்தில் நீங்கள் கூறிய வார்த்தைகளை நம்பி வாக்களித்து ஏமாந்து விட்டோமோ என்ற கேள்வியும் இயற்கையில் எழும்.

கொரானா நோய் தொற்று காலத்தில் 24 X 7 மணி நேரமும் தடையில்லா மின்சாரத்தை வழங்கி அரசின் ஊரடங்கை அமலாக்கி கணக்கீடு பணி உட்பட அனைத்து பணிகளிலும் ஈடுபட்டு 300- க்கும் மேற்பட்டோர் இந்த கொடிய நோயினால் மரணத்தை தழுவியும் பலர் நோயால் பாதிக்கப்பட்டும் நாங்கள் இந்த பணியை செய்து வருகிறோம். ஆனால் எங்களுக்கு வழங்க வேண்டிய பஞ்சப்படியை வழங்க மறுப்பது நியாயந்தானா? IAS அதிகாரிகளுக்கு அகவிலைப்படி இருக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் MLA-களுக்கு ஊதியமும், ஓய்வூதியமும் உண்டு.

பஞ்சப்படியோ, ஓய்வூதியமோ வழங்க முடியாத உண்மை நிலை இருந்தால் அமைதியாக இருப்பது நன்று. அதை விடுத்து, பொது தளங்களில் அரசு ஊழியர்களை மக்களிடத்தில் வில்லனாகவும், நிதி அமைச்சர் தன்னை ஹீரோவாகவும் காட்டிக்கொள்ளும் முயற்சியை கைவிட வேண்டும்.

சமூகநீதி பின்பற்றி அகவிலைப்படி வழங்கப்படும் என்று கூறி இருப்பது எந்த விதத்தில் பொருத்தமாக இருக்கும்.

பஞ்சப்படிக்கும், சமூகநீதிக்கும் என்ன சம்மந்தம்!

நிதி அமைச்சரே தங்களது பேச்சில் உடல்மொழியில் நாகரீகத்தையும், நாணயத்தையும் எதிர்பார்க்கிறோம். எங்களை உதாசீனம் செய்யாதீர்கள்.

யாகவராயினும் நாகாக்க .... என ஐயன் திருவள்ளுவர் சொன்னதை நினைவிற்காக..

மின் ஊழியர்களுக்கும் போக்குவரத்து ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், பஞ்சப்படியை, எந்த வழியில் தமிழக அரசிடமிருந்து பெற முடியும் என நன்கு தெரியும்.

தமிழக முதல்வர் தலையிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மின் ஊழியர்கள்!








# சாதனையாளர் சி.ஜி. யின் நூறாவது பிறந்த நாள்!

மின் ஊழியர் மத்திய அமைப்பு 1970 நவம்பர் 14-ல் உருவாக்கப்பட்ட பொழுது அதன் முதல் தலைவராக இருந்து 11 ஆண்டு காலம் செயல்பட்டவர் அருமைத் தோழர் சி.கோவிந்தராஜன்.

1921 செப்டம்பர் 15-ல் அன்றைய தென்ஆற்காடு மாவட்டத்தில் மேல்புவனகிரியில் பெருமத்தூர் கிராமத்தைச் சார்ந்த திரு. சின்னசாமி பெரிய ஆயாள் தம்பதியின் ஒரே மகனாக பிறந்தார். இளம் வயதிலேயே தேசபக்தி நிரம்பியவராக இருந்தார். தேசிய இயக்கம் குறித்து அவரிடத்தில் ஆர்வம் இருந்தது.

பெரமத்துார் கிராமத்தின் அருகில் எங்கு காங்கிரஸ் கூட்டம் நடந்தாலும், அவரது நெருங்கிய ஆசிரியர்கள் அழைத்துச் சென்று தேச பக்தியை ஊட்டினார்கள். தோழர் சி.ஜி. இளம் வயதிலேயே நூல் நூற்றுக் கொண்டே இந்தி மொழியையும் படித்தவர். அதனால் காங்கிரஸ் கூட்டங்களில் இந்தி மொழியில் இறை வணக்கம் பாடலை சி.ஜி. அவர்களை பாடச்சொல்வார்கள்.

காந்தியின் நான்கு நிர்மாண திட்டங்களில் மூன்றை தோழர் சி.ஜி. இடைவிடாது பின்பற்றி வந்தார். ஆனால் தீண்டாமை ஒழிப்பு என்னும் நான்காவது திட்டத்திற்கு எதுவும் செய்ய வில்லையே என்ற மனஉறுத்தல் அவருக்கு இருந்தது.

கிராமங்களில் மக்கள் சந்திக்கும் இடங்களில் பிராமணர்கள் காபி கிளப், - சைவாள் காபி கிளப் என கடைகள் இருந்தது. இதில் எதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய அனுமதியில்லை.

தோழர் சி.ஜி அவர்கள் பிராமணர் ஹோட்டலில் இருந்து மெதுவடையை வாங்கி வந்து தாழ்த்தப்பட்ட குடும்பத்துச் சிறுவனை நடுவில் நிறுத்தி வடையின் ஒரு பகுதியை சிறுவன் திண்ண, இன்னொரு பகுதியை தோழர் சி.ஜி.யும், அவரது நண்பர்களும் பகிர்ந்து உண்டனர். பலமுறை செய்து புரட்சியாக அதை மாற்றியவர்.

1937-ல் சிதம்பரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தோழர் ஜீவாவின் உரையைக் கேட்டு அவரது பேச்சால் ஈர்க்கப்பட்டார் தோழர் சி.ஜி.

சுதந்திர போராட்டத்தில் ஒன்றி போய் இருந்த தோழர் சி.ஜி.யின் மனதில் படித்து என்ன பயன் மக்களுக்கு சேவை நாட்டு விடுதலை என்ற எண்ணம் தனது லட்சியம் கருதி பல்கலைக் கழகத்தில் இருந்த வெளியேறினார்.

1936-ல் நெல்லிக்குப்பம் பாரிசர்க்கரை ஆலையில் பணியாற்றியவர். தொழிற்சங்க பணிக்காக சர்க்கரை ஆலை பணியை உதறி தள்ளியவர் கடலூர் இரயில்வே தொழிற்சங்கம், கைத்தறி தொழிலாளர் சங்கம், மதுமர தொழிலாளர் சங்கம், ஓட்டல் தொழிலாளர் சங்கம், படகு தொழிலாளர் சங்கம். தென்னாற்காடு மாவட்ட ரைஸ் அண்டு ஆயில்மில், தென்னாற்காடு மாவட்ட எலட்ரிக்கல் காண்ட்ராக்ட் தொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்களை துவக்கி திறமையாக செயல்பட்டவர் தோழர் சி.ஜி.

1968-ல் எண்ணுார் அனல் மின் நிலைய தொழிலாளர் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் நெல்லிக்குப்பம் தொகுதியில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டவர். நெல்லிக்குப்பம் நகர்மன்ற தலைவராகவும் பணியாற்றினார்.

அவரது தலைமறைவு வாழ்க்கையும், அடக்குமுறையின் போது அவர் பட்ட துன்பங்களும், துயரங்களும் சொல்லி மாளாது. அவரது வாழ்க்கை வரலாற்றை இந்த தலைமுறையும் கற்றுணர்ந்து அதன் வழியில் நடந்திட சபதமேற்பதே தோழர் சி.ஜி-க்கு நாம் செய்யும் மரியாதை.

**தோழர் சிஜி யின் நூற்றாண்டு பிறந்த நாளை கொண்டாடுவோம்!**
**வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடிப்போம்!!**

# வாழும் மார்க்ஸ்சியத்திற்கு! தகைசால் தமிழர் விருது!



தகைசால் என்றால் என்ன?

தகைசால் என்ற சொல் விளிம்பி நாகனார் எழுதிய நான்மணிக்கடிகை என்ற நூலில் பண்பிற் சிறந்தவர் என்றும், பூதேஞ்சேந்தனார் எழுதிய இனியவை நாற்பது என்ற நூலில் தகை என்ற சொல் பெருமை என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது.

தகை என்ற சொல்லுக்கு அழகு, அன்பு, அருள், கவசம், குணம், தகுதி, பொருத்தம், பெருமை என பொருள் உரைக்கிறது சொல் அகராதி.

சால் - என்ற சொல் செல்தடம், ஏர் கலப்பை, நிறை, மிகு, மேன்மை, சான்றோன் என பல பொருள் உண்டு என சொல்கிறது சொல் அகராதி.

கலப்பை கொண்டு உழும் பொழுது மண்ணில் ஏற்படும் சிறுமேடு சால் எனப்படும் கலப்பை கொண்டு நேராகவே உழ வேண்டும்.

குறுக்கே உழுதால் உழவின் பயன் கிடைக்காது.

**<u>தகைசால் விருது</u>**

எந்த பொருளைக் கொண்டு பார்த்தாலும் சுதந்திர போராட்ட வீரர், எங்கள் தோழர் சங்கரைய்யா தகைசால் தமிழர் விருதுக்கு பொருத்தமானவரே!

தகைசால் தமிழர் விருதை முதன் முதலாக அறிவித்து, அதை தோழர் சங்கரைய்யாவிற்கு வழங்கி தகைசால் விருதின் தொகையை ரூ 10 லட்சத்தையும் வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றிகள்.

பரிசுத்தொகையை முதல்வர் நிவாரண நிதிக்கு திருப்பி வழங்கி மக்கள் நலன் ஊழியன் என்று நிருபித்த தோழர் சங்கரைய்யாவிற்கு செவ்வணக்கம்!



## தமிழக திமுக அரசின் அளப்பரிய சாதனை! அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்!!

சாதியிலிருந்து ஒதுக்கப்பட்டு ஐந்தாவது வர்ணமாக திகழ்ந்த பஞ்சமர்களை தீண்டப்படாதவர்கள் என கூறி சமூகத்தில் ஒதுக்கி வைத்த சூழல் இந்த தேசத்தில் இருந்தது. இந்த வழக்கத்தை தமிழகத்திலும், கேரளத்திலும் தந்தை பெரியார், தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயத்திற்குள் உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டபொழுது கடுமையாக போராடி வந்தார்.

தமிழகத்தில் பெரியாரின் கருத்துக்களோடு செயல்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் முயற்சி எடுத்தார். அதற்கு பின் ஆட்சிக்கு வந்த திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள் 1970-ம் ஆண்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சர் ஆகலாம் என்ற சட்டத்தை இயற்றினார். அனைத்து சாதியினரும் அர்ச்சகர்கள் ஆகும் இந்த சட்டத்தை அதற்கு பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் பெரியதாக முயற்சிக்கவில்லை.

தற்பொழுது புதியதாக தமிழகத்தில் பதவியேற்ற திமுக அரசு அனைத்து சாதிகளை சார்ந்த 24 அர்ச்சர்கள்இதர பாடசாலையில் பயிற்சி பெற்ற 34 அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியர்கள், 20 ஓதுவார்கள், பரிசாகர் உள்ளிட்ட பதவிகளில் 12 பேர் என 208 பேருக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.


இதில் பெருமைப்பட வேண்டிய விஷயம் கரூரைச் சேர்ந்த சு. சுஹாஞ்சனா (வயது 28) என்ற பெண் ஓதுவார், ஓதுவாராக சென்னை மாடம்பாக்கத்திலுள்ள தேனுபுரீஸ்வரர் கோயிலுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக முதல்வரின் இந்த நடவடிக்கை தலித்துக்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தகுதியையும் கடவுளின் முன் அனைவரும் சமம் என்று உணர்த்தியுள்ளது.

எந்த சிவபெருமானை சிதம்பரத்தில் காண கோயிலுக்குச் சென்ற போது தீட்டுப்பட்டதாகக் கூறி நந்தனை தீக்கிரையாக்கிய வர்ணாசிரம கும்பல்கள் செய்தார்களோ அந்த நந்தனின் வாரிசுகளாய் ஒடுக்கப்பட்ட மக்களை கடவுளின் சன்னிதியில் பணியாற்றிட வைத்த திமுக அரசிற்கு தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பாராட்டுகள் மற்றும் வாழ்த்துக்கள்.



**எஸ். இராஜேந்திரன்**



# தமிழக அரசின் மின்வாரிய மறுசீரமைப்பும்! பஞ்சப்படி அறிவிப்பும்!!

புதியதாக பொறுப்பேற்ற தமிழக அரசு தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை அரசு ஊழியர்களுக்கு அளித்தது. அதில் மிக முக்கியமானது பழைய பென்சன் திட்டத்தை கொண்டு வருவது, மற்றும் 3 லட்சம் அரசு காலிப்பணி இடங்களை நிரப்புவது. இந்த இரண்டு கோரிக்கைகளும் மின் வாரியத்திற்கும் பொருந்தும். தமிழக நிதி அமைச்சர் வெளியிட்ட வெள்ளை அறிக்கையிலும் 13.08.2021 அன்று வெளியிட்ட 2021-22-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும், நீண்டநாள் கோரிக்கையான பழைய ஓய்வூதியம், காலிப்பணி இடங்களை நிரப்புவது பற்றி அறிவிக்காதது மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. மேலும் ஒன்றிய அரசு அறிவித்த 11சத பஞ்சப்படியானது 01.04.2022-ம் ஆண்டு முதல் அளிக்கப்படும் என்ற அறிவிப்பானது மாநில அரசின் மீது அரசு ஊழியர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை குறைப்பதாக அமைந்துள்ளது.

பஞ்சப்படி, ஈட்டிய விடுப்பு (Surrender leave) இரண்டாண்டுகளுக்கு முடக்கப்பட்ட நிலையில் ஒன்றிய அரசு பஞ்சப்படியை அறிவித்த போதும், தமிழக அரசு அறிவிக்காமல் மேலும் 9 மாதங்களுக்கு இல்லை என்ற அறிவிப்பு, ஊழியர்களை தமிழக அரசு போராட்டத்திற்கு தள்ளுவதாகவே அமைந்துள்ளது. தமிழக அரசு நிதி நிலையை காரணம் காட்டி அரசு ஊழியர்களுடைய சரண்டர் விடுப்பு, பஞ்சப்படி ஆகியவற்றை முடக்குவதன் மூலமாக தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறையை தீர்த்துவிட முடியாது. அரசு இயந்திரம் இயங்க வேண்டுமானால் அரசு ஊழியர்கள் என்ற பல்சக்கரம் சுழல வேண்டும். இதை நன்கு உணர்ந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அரசு ஊழியர்களையும், அரசு இயந்திரத்தையும் சரியாக நிர்வகித்தார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் தற்பொழுது தமிழக அரசு அந்த பாதையிலிருந்து திசை மாறுவதாகவே கருத வேண்டியிருக்கிறது.

கொரானா பெருந்தொற்று காரணமாகவும், முந்தைய அண்ணா திமுக ஆட்சியினுடைய தவறான நிதி மேலாண்மை காரணமாகவும், தற்பொழுது தமிழக அரசுக்கு மிகுந்த நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அதனால் தான் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2,63,000/- ரூபாய் கடன் ஏற்படுத்தியுள்ளதாகவும், தமிழக அரசு வாங்கியுள்ள கடனுக்கு ஒரு நாளைக்கு ரூ.183/- கோடி ரூபாய் வட்டி கட்டப்படுவதாகவும் தமிழக நிதி அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்களின் வெள்ளை அறிக்கையிலும், நிதி அறிக்கையிலும் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் நிதி நெருக்கடிக்கு காரணம் அல்லது தமிழக மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்து துறையில் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு காரணம் தமிழக மக்கள் அல்ல, மின்வாரிய, போக்குவரத்து ஊழியர்களும் அல்ல. இதற்கு மிக முக்கிய காரணம் கடந்த ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட திறமையற்ற நிர்வாகமும்,

லஞ்சமும் ஊழலும் தான் காரணம். மின் வாரியத்தில் ரூ.1,31,000 கோடிக்கு மேல் கடன் உள்ளதற்கு காரணம் மின்சாரத்தை தனியாரிடமிருந்து அதிக விலைக்கு வாங்கியதும், நிலக்கரியை சந்தை விலைக்கும் அதிகமாக வாங்கியதுமே முக்கிய காரணம். மின்சார கொள்முதலிலும், நிலக்கரி கொள்முதலிலும் மிகப்பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். அதன் ஒரு பகுதிதான் முன்னாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. வேலுமணியின் வீடுகளில் நடந்த ரெய்டு விவகாரம். மின் வாரியத்திலும் இது போன்ற ஊழலுக்கு துணைபோன அதிகாரிகள் மீதும் ஆட்சியாளர்கள் மீதும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே நமது விருப்பமாகும்.

மின்வாரிய நிர்வாகம் 2000-ம் ஆண்டு வரை லாபத்தில் இயங்கி வந்தது, மின்வாரியம் தனது சொந்த மின் உற்பத்தியை என்று குறைத்துக் கொண்டு தனியாரிடம் மின்சாரம் வாங்க முற்பட்டதோ அன்றிலிருந்து மின்வாரியம் நஷ்டத்தை நோக்கி நகர தொடங்கியது. மின்வாரியம் தனது சொந்த மின் உற்பத்தி மூலமாக சேவை செய்து வந்த வரையில் நட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. மின்வாரியத்தினுடைய மின் உற்பத்தியை நிறுத்திவிட்டு தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் மின்சாரத்தை வாங்கி தனியார் முதலாளிகளை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்ட மத்திய, மாநில அரசுகளின் தவறான வழிகாட்டுதலே இந்த நிதி நெருக்கடிக்கு காரணம் என்பதை தமிழக அரசு நன்றாக உணர்ந்திருக்கும் என்று நம்புகிறோம். ஆக தமிழக அரசின் கடந்தகால விலையில்லா அரிசி உள்ளிட்ட பல பொருட்களினுடைய செலவினங்கள். அதிலும் குறிப்பாக மக்கள் கேட்காமலேயே கொடுத்த பல இலவசங்கள் தான் இன்றைய நிதி நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என்பதை நாம் மறந்து விட இயலாது.

தமிழக அரசு என்பது மாணவர்களின் இளைஞர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுதலாக, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்வதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் அரசாகும். சுதந்திரம் பெற்ற 75 ஆண்டுகள் கடந்த பிறகும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, மாநில அரசுகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தாமல் தங்களின் சுயலாபத்திற்காக செயல்பட்ட காரணத்தினால் இந்த நிலை உருவாகியுள்ளது. ஏழைகள் ஏழைகளாகவே இருப்பதும், செல்வந்தர்கள் ஆட்சி கட்டிலில் அமர்வதும், அமர்ந்த பின்பு செல்வந்தர்களுக்கான ஆட்சி நடத்துவதும் தமிழக அரசும் ஒன்றிய அரசும் தொடர்ந்து செய்து வரும் அரசியலாகவே பார்க்க வேண்டியுள்ளது. தமிழக மக்கள் அரசியல் அறியாமையில் உள்ளதை நன்கு உணர்ந்த அரசியல் கட்சிகள் அவர்களிடமிருந்து ஓட்டுகளை விலைக்கு வாங்கி அவர்களது எதிர்காலத்தை பறித்துக் கொள்ளும் சம்பவம் இன்றும் தொடர்கிறது. மக்கள் விரைவில் அரசியல் அறியாமையிலிருந்து வெளியே வருவார்கள் என்று நம்புவோம்.

தமிழக அரசை திறம்பட நடத்துவதற்கு பதிலாக, நிதி ஆதாரத்தை வேறு வழியில் திரட்டுவதற்கு பதிலாக வரிகட்டாத பணக்காரர்களிடமிருந்து, தொழில் அதிபர் களிடமிருந்து, திரை நட்சத்திரமிடமிருந்து, கிராணைட் கொள்ளையர்களிடமிருந்து மற்றும் பல வழிகளில் திரட்டுவதற்கு வாய்ப்புகள் இருந்தும், வசதிகள் இருந்தும் அதை செய்யாமல் மீண்டும், மீண்டும் அரசு ஊழியர்களின் பஞ்சப்படியில், சரண்டர் விடுப்பில் கை வைப்பதென்பது பொருத்தமற்றது. தமிழக நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டுவரப் போவதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அனைத்து துறைகளிலும் புள்ளி விவரங்களை கேட்டு வருவதாக நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, விரைவுப்படுத்தி தேர்தலில் திமுக சொன்ன வாக்குறுதிகளை விரைந்து நிறைவேற்றும் என்று கூறியுள்ளார். நாமும் அந்த கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அதே நேரம் மறுசீரமைப்பு என்ற பெயரால் சமூக நீதி பாதிக்காமல், ஊழியர்கள், தொழிலாளர்கள் நலன் பாதிக்காமல் சமூகத்தில் சமநிலை உருவாவதற்கு பயன்பட வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.


பஞ்சப்படி 9 மாதங்கள் இல்லை என்பது தமிழக அரசின் வாக்குறுதிகளுக்கு மாறாக இருப்பதாகவே மின் ஊழியர்கள் கருதுகிறார்கள். மின்வாரியத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள், இன்றைய நவீன காலகட்டத்திற்கு வரவேற்க வேண்டிய ஒன்று தான். ஆனால் அதை

தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தி அதனடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமே தவிர அரசு தன்னிச்சையாக முடிவெடுத்து அமல்படுத்தி விட முடியாது. தொழிற்சங்கங்களும் அதை ஏற்காது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். மின்வாரியம் என்ற பொதுத்துறை தமிழகத்தில் உள்ள 7.25 கோடி மக்களால் இணைக்கப்பட்ட, பிணைக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனம். விவசாயிகளின் வாழ்வாதாரம், மின்சாரத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள், ஏழை எளிய மக்கள் இவர்களின் அவசிய தேவையாக மின்சாரம் உள்ளது. இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு அரசு தனது மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தொழிற்சங்கங்களோடு பேசி அமல்படுத்துவதே சிறப்பானது.

தமிழக அரசு இந்த நிதி நெருக்கடி காலத்தில் அரசு ஊழியர்களையும், நிதி நெருக்கடியையும் எவ்வாறு கையாளப் போகின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**- தி.ஜெயசங்கர்**


## சமையல் எரிவாயு உருளை10 மாதங்களில் ரூ. 290/- அதிகரிப்பு



ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த எண்ணெய் நிறுவனங்கள் எரிவாயு சிலிண்டர் விலையை உயர்த்திக் கொள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியதின் விளைவு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு விலையை உயர்த்தி வருகின்றன.

சிலிண்டர் மீதான விலை ஒவ்வொரு மாதமும் உயர்த்துவதால் ஒன்றிய அரசு கடந்த ஆண்டு மே மாதத்துடன் மானியத்தையும் நிறுத்தி விட்டது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தாலும் ஒன்றிய ஆட்சியாளர்கள் விலையை குறைக்க மாட்டார்கள். மக்களின் தலையில் விலை உயர்வு சுமையை சுமத்தி கார்ப்பரேட்டுகளுக்கு சலுகையை வழங்கி வருகிறது ஒன்றிய பிஜேபி அரசு. இது இரக்கமற்ற கொடூரதாக்குதல்.




## இரக்கமற்ற மோடி அரசின் இன்னொரு தாக்குதல் சுங்கச்சாவடி கட்டணம் உயர்வு

தமிழகத்தில் 6606 கி.மி. தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் 5134 கி.மி. சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரித்து வருகிறது. மொத்தம் 49 இடங்களில் சுங்கச்சாவடி கள் அமைத்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. செப்டம்பர் 1 முதல் 24 சுங்க சாவடிகளில் 8 முதல் 10 சதவீதம் வகையில் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

போதிய கட்டமைப்பு மேம்படுத்தாமல் ஆண்டுதோறும் கட்டணத்தை உயர்த்துவது வாகன ஓட்டிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எவ்வித பராமரிப்பும், சாலையை விரிவாக்கமும் செய்யாமல் பல ஆண்டுகள் கடந்த பின்பும் கட்டணம் வசூலிப்பது மோடி அரசை தவிர யாராலும் செய்ய முடியாது.



# முண்டாசு கவிஞனின் நூற்றாண்டு நினைவு தினம்!

இந்திய சுதந்திர போராட்டத்தில் பல்வேறு கவிஞர்கள் தங்கள் கவிதைகள், பாடல்கள் மூலம் சுதந்திர வேள்வித்தீயையை மூட்டி வளர்த்தார்கள். அந்த வகையில் தமிழகத்தின் முண்டாசு கவிஞன் எட்டைய புரத்தான் எங்கள் பாரதியும் ஒருவன்.

1832 டிசம்பர் 11-ல் எட்டையபுரத்தில் பிறந்த பாரதியின் பெயர் சுப்பிரமணியன் , செல்லப்பெயர் சுப்பையா, இளம் வயதிலேயே தனது தந்தையை பறிகொடுத்தவர். 16வது வயதில் தந்தையை பறிகொடுத்தவர். 1897-ல் 14 1/2 வயது பாரதிக்கும், 7வயது செல்லமாவுக்கும் திருமணம். இளம் வயதிலேயே 34 நாட்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவன் பாரதி. 1905-ல் வங்கப்பிரிவினை வந்த பொழுது சமூக சீர்த்திருத்தவாதி பாரதி அரசியல் தீவிரவாதியானார்.

பாரதியின் முதல் நூல் சுதேச கீதங்கள் என்ற கவிதைத்தொகுதி ஜென்மபூமி அவரது இரண்டாவது கவிதைத் தொகுதி வெளியீடு , பாரதியின் உணர்ச்சி மிக்க பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில், கீதை மொழி பெயர்ப்பு, போன்றவை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தேசவிடுதலைக்காக போராடுபவர்கள் மத்தியில் பாரதியின் எழுச்சியூட்டும் பாடல்களும் சுதந்திர வேட்கை தீயிக்கு உற்சாகத்தை ஊட்டின.

பாரதி தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு முன்பே,
“செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயீது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினேலே ஒரு
சக்தி பிறக்கிறது மூச்சினிலே”

என்று தமிழ் மொழிமேல் காதல் கொண்டவர்.
“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம்”
என்றும்,
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்” என்று
அன்றே வேண்டு கோள் வைத்தான் பாரதி.

அது மட்டுமா
உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்...
வீனில்
உண்டுகளத்திருப்போரை நிந்தனை செய்வோம்..

என்று உழவுத் தொழின் மேன்மையை எடுத்துரைத்தவர் பாரதி

1921 ஆகஸ்ட் மாதத்தில் திருவல்லிக்கேணி கோயில் யானை ஒதுக்கித்தள்ள
யானை காலடியில் கிடக்கிறார். அதிர்ச்சியில் நோயுற்ற பாரதி வயிற்றுக் கடுப்பு
நோயால் பாதிக்கப்பட்டு 1921 செப்டம்பர் 11 அன்று இவ்வுல வாழ்வை துறந்து
அவ்வுலக வாழ்வை துவங்க சென்று விட்டார்.

பாரதி மறைந்து 100 ஆண்டுகள் ஆனாலும்
தமிழ்ச் சமுதாயம் இருக்கின்ற வரை, இப்பூவுலகம் இருக்கின்ற வரை
தேசத்தை நேசிக்கும், கடைசி மனிதன் உள்ளவரை
எம் பாரதியின் பாடல்கள் உற்சாகத்தையும், மன நிறைவையும்
ஊட்டிக் கொண்டே இருக்கும்.

**- எஸ்.இராஜேந்திரன்**




இந்திய நாட்டின் கோயில்கள் என்று வர்ணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் ரூ. 6 லட்சம் கோடி சொத்துக்களை ஏலம் விடும் தேசிய பணமாக்கும் திட்டத்தை ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அறிவித்துள்ளார். இதன் மூலம் சென்னை, மும்பை, டெல்லி, உள்பட 25 முக்கிய விமான நிலையங்கள், 400 இரயில்வே நிலையங்கள், 50 பயணிகள் ரயில் 26,700 கி.மி. தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்டவைகளை தனியாருக்கு தாரை வார்க்க முடிவெடுத்து அறிவித்துள்ளார்.

இதில் நிதி திரட்ட மின் பகிர்மானம், சாலைகள், இரயில்வே, எண்ணெய் மற்றும் எரிவாயு, தொலை தொடர்புதுறை ஆகிய முக்கிய துறைகளில் மட்டும் ஒன்றிய அரசு ஏலம் விட உத்தேசியுள்ள ரூபாய் ஆறு லட்சம் கோடியில் 81 சதவீதம் இந்த ஐந்து துறைகளில் திரட்ட திட்டமிட்டுள்ளது.

கொரானா போன்ற பேரிடரால் அரசின் வளர்ச்சி திட்டங்களுக்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாத சூழலில் இந்த நடவடிக்கை பாஜக அரசு எடுத்துள்ளதாக ஒன்றிய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய பிஜேபி அரசின் ஆட்சி காலகட்டத்தில் ஒரு பொதுத்துறை நிறுவனத்தைக்கூட உருவாக்க முடியாத மோடி அரசு, தேசத்தின் இயற்கை வளங்களை மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும். சாதகமாக அமைகின்ற வகையில் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

மின்சார வசதியை குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொண்டிருந்த மக்கள் இனி அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இரயில் நிலையங்களில் பிளாட் பார்ம் கட்டணங்களோடு பயண கட்டணமும் கடுமையாக உயரும். இயற்கை எரிவாயு பைப்லைன் தனியாருக்கு விடுவதால், கேஸ் விலை உயரும். பாமர மக்களின் ஆகாய விமான போக்குவரத்து பயணம் என்ற ஆசை காணல் நீராய் மாறும். விளையாட்டு அரங்குகளை தனியாருக்கு கொடுப்பதால் விளையாட்டில் சாதனை படைக்கத் துடிக்கும் இளம் வீரர்களின் கனவு கனவாகவே மாறி விடும்.

வேலை இல்லாத இளைஞர்களின் அரசு வேலை என்ற எதிர்பார்ப்பும், ஆசையும் மண்ணோடு மண்ணாக புதைந்து போய் விடும்.

ஜனநாயகத்தின் மாண்புகளை உயர்த்திப் பிடிக்க வேண்டிய மோடியின் சர்க்கார் ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து புதைக்குழியில் அமுக்கி அதன் மீது நின்று தனியார்மய மோகத்தின் மேல் உள்ள ஈடுபாட்டால் கூவிக்கூவி பொதுத்துறைகளை ஏலம் விடுகிறது.

பொதுத்துறைகளை சூறையாடும் இந்த நடவடிக்கை பொருளாதாரத்தில் புரட்சியையோ, சுய சார்போ, அடைய முடியாது என உணர்ந்தும் உணராத அரசாக மோடி அரசு உள்ளது. வெள்ளையனிடமிருந்து நம்முன்னோர்கள் போராடி பெற்ற சுதந்திரத்தின் சுவாசக்காற்றை நிறுத்தி விட நிர்மலா சீத்தாராமன் வகையறாக்கள் முயற்சி

செய்வதை இந்திய தொழிலாளி வர்க்கம் ஒரு போதும் அனுமதியாது.

ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக உருவாக்கப்பட்ட தேசத்தின் இந்த பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு கொடுப்பது என்பது ஒட்டு மொத்த தேசத்தின் வளர்ச்சியை பாதிக்கும். மின்சாரமும் இரயில்வேயும் தொலை தொடர்பும், நிலக்கரியும், அரசின் பொதுத்துறையில் இருந்த காரணத்தால் சுதந்திரத்தின் காற்றை சுவாசித்து தேசத்தின் வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்தி தொழில் வளர்ச்சியிலும், விவசாயத்திலும் சாதனைகளை எட்ட முடிந்தது. இந்த சாதனை படைத்த இந்த நிறுவனங்களை எல்லாம் இன்னும் மேம்படுத்தி சமூகக் கண்ணோட்டத்தோடு தேசத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல வேண்டிய ஒன்றிய அரசு கார்ப்பரேட்டுகளுக்கும் இந்திய பெருமுதலாளிகளுக்கும் வென்சாமரம் வீசி தங்கத்தட்டில் பொதுத்துறைகளை விற்க நினைப்பது எங்கள் இந்திய தேசத்தை கூறு போட்டு விற்பதற்கு சமம்.

இந்திய தொழிலாளி வர்க்கமும், தேசத்தின் ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்டுள்ளவர் களும் பொதுத்துறைகளை நேசிப்பவர்களும் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய நேரமிது.

பொது சொத்துக்களை சூறையாடுவது!
பொருளாதார அறிவுமல்ல!
பொது அறிவுமல்ல!



## தோழர் என்.சங்கரய்யா அவர்களின் 100 வது பிறந்தநாள் கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சி

சுதந்திர போராட்ட வீரர் தோழர் என்.சங்கரய்யா அவர்களின் 100 வது பிறந்தநாள் கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சி சென்னை தெற்கு வட்டம் 2-ல் பம்மல் மின்வாரிய அலுவலகம் முன்பு 15.07.2021 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பி.டில்லிகுமார் தலைவர் தாம்பரம் கோட்டம் தலைமை தாங்கினார். கோட்டச் செயலாளர் டோமினிக் சேவியர் வரவேற்புரை யாற்றினார்.

கல்வெட்டை திறந்து வைத்து மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் தி.ஜெய்சங்கர் அவர்களும், செங்கொடியேற்றி தெற்கு மண்டல செயலாளர் தோழர் ஏ.முருகானந்தம் அவர்களும், கிளை செயலாளர் தோழர் டி. அன்பழகன் அவர்களும் கிளைத் தலைவைர் தண்டபாணி, கிளைப்பொருளாளர் ஜி. ரவி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள் விஜயலட்சுமி, ஆதன் இளங்கீரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தோழர் குமார் தாம்பரம்




கோட்ட துணைத்தலைவர் நன்றி கூறினார்.

அதே போல சென்னை தெற்கு வட்டம் -1-ல் போரூர் கோட்டத்தில் கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சி 15.07.2021 அன்று மாலை தோழர் எஸ். பழனி தலைவர் போரூர் கோட்டம் நடைபெற்றது. முன்னதாக தோழர் விஜயபாஸ்கர் செயலாளர் போரூர் கோட்டம் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். தோழர் ஆதன் இளங்கீரன், செயலாளர் TNPEO பொறியாளர் அமைப்பு கொடியை ஏற்றி வைத்தார். சிஐடியு கொடியை மண்டல செயலாளர் தோழர் ஏ.முருகானந் தம் ஏற்றி வைத்தார். மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் கல்வெட்டினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அதன்பின் நடைபெற்ற நிகழ்ச்சியில் தோழர் கே.தரணி தலைவர் சென்னை தெற்கு-1 வட்டம், தோழர் பண்டராம்பிள்ளை பொருளாளர், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தோழர் எம். வெங்கடேசன் துணைச்செயலாளர் போரூர் கோட்டம் நன்றியுரை கூறினார்.

# கேங்மேன் பணியாளர்களின் மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



திருச்சியில் ஆகஸ்ட் 1 அன்று நடைபெற்ற செயற்குழு முடிவின்படி கேங்மேன் பணியாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளை முன் வைத்து 24.08.2021 அன்று தமிழகம் முழுவதும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சக்தியாக நடைபெற்றது. கேங்மேன் பணியாளர்களுக்கு பயிற்சி காலம் இரண்டாண்டுகள் என்பதை முத்தரப்பு ஒப்பந்தப்படி மூன்று மாதங்களாக குறைத்து காலமுறை ஊதியம் வழங்கிடவும், கேங்மேன் பணியாளர்களை சொந்த மாவட்டத்தில் பணியாற்ற ஊர் மாறுதல் வழங்கிடவும், தகுதியுள்ள கேங்மேன் பணியாளர்களுக்கு உள்முகத் தேர்வு வாய்ப்பு அளித்திடவும், தேர்வு செய்து நிலுவையில் உள்ள 5000 கேங்மேன் தேர்வர்களுக்கு பணி ஆணை வழங்கிடவும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கேங்மேன் பணியாளர்கள் எழுச்சியாக கலந்து கொண்டு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர். சில மாவட்டங்களில் காவல்துறை கெடுபிடி இருந்த போதும் அதையும் மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியது பாராட்டுக்குரியது.

கேங்மேன் போராட்டம் என்பது பணியாளர்கள் வேலை செய்யும் மின் வட்டங்களில் சிறப்பாகவும் எழுச்சியாகவும் நடைபெற்றது என்பது ஒருபுறம் நமக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது என்பதை விட கேங்மேன் பணியாளர்கள் மத்தியில் சங்கத்தின் மீதும், சங்க தலைவர்கள் மீதும், மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. மேலும் கேங்மேன் பணியாளர்கள் பணி செய்யாத திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திலும், சேலம் மின் பகிர்மான வட்டத்திலும் கேங்மேன் குடும்பங்களையும், தேர்வு செய்து நிலுவையில் உள்ள கேங்மேன்களையும் ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியது சிறப்புக்குரியது பாராட்டுக்குரியது.

கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நாம் நிர்வாகத்திடமும், மின்துறை அமைச்சரிடமும் தொடர்ந்து பேசி வருகின்றோம். பல்வேறு கடிதங்களை கொடுத்து நமது கருத்துக்களை ஆழமாக விவாதித்துள்ளோம். 19.08.2021 அன்று மின்வாரிய தலைவரோடு நடைபெற்ற காலமுறை பேச்சுவார்த்தையின் போது கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கை சம்மந்தமாக விரிவாக பேசப்பட்டது. மின்வாரிய தலைவரும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இந்த நிலையில் நடைபெற்று வரும் சட்டமன்ற கூட்டத் தொடரில் கேள்வி நேரத்தில் கேங்மேன் பணியாளர்களின் கோரிக்கைகளை கேட்பதற்கும், பேசுவதற்கும் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதம் 2021-ல் பணியேற்ற கேங்மேன் பணியாளர்களின் முதல் போராட்டம், கன்னிப்போராட்டம் மாபெரும் வெற்றியடைந்துள்ளது.

மின்துறை அமைச்சர், மற்றும் மின்வாரிய நிர்வாகமும் அளித்த வாக்குறுதிகள் நிறைவேறும் என்று நம்புவோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சி அமைந்து முதலமைச்சராக மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுள்ள நிலையில் கேங்மேன் பணியாளர்களின் அனைத்து கோரிக்கைகளும் தீர்க்கப்படும் என்று நம்புவோம்.

**பொறுத்திருப்போம்! விழித்திருப்போம்!**

- தி.ஜெ.



# கனற்று எழுந்த ஒப்பந்த ஊழியர் போராட்டம்

ஆகஸ்ட் 1 திருச்சியில் நடைபெற்ற செயற்குழு முடிவின் அடிப்படையில் ஒப்பந்த ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு பணி நிரந்தரம் செய் என்ற கோரிக்கையை முன்வைத்து 17.08.2021 அன்று தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் எழுச்சியாக நடைபெற்றது. மாவட்ட தலைநகரங்களில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் திரளான ஒப்பந்த ஊழியர்கள் கலந்து கொண்டனர். பல மாவட்டங்களில் நம்மிடமிருந்து பிரிந்து சென்ற நூற்றுக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் மீண்டும் நமது உண்மையான நேர்மையான நடவடிக்கையை கண்டு நம்மோடு இணைந்தனர் என்ற செய்தி நமக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. ஒன்றுபட்ட போராட்டமே அரசின் காதுகளுக்கு எட்டும் என்பதையும் சிஐடியு சங்கத்தால் மட்டுமே இது சாத்தியம் என்று நம்மோடு இணைந்துள்ளவர்களை வரவேற்போம். வாழ்த்துவோம்.

அதே போல இந்த முறை தெர்மல் நிலையங்களில் ஒப்பந்த ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் சிறப்பாகவும் வலுவாகவும் நடைபெற்றது. குறிப்பாக வடசென்னை அனல் மின் நிலையம்-2 சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 350-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது ஒரு முக்கிய நிகழ்வாக காண முடிகின்றது. தெர்மல் கூட்டத்தில் அடுத்த போராட்டம் குடும்பத்துடன் செய்வோம் என்ற தொழிலாளியின் முழுக்கங்கள் ஊழியர்கள் மத்தியில் பரவச நிலை எட்டியதை நன்றாக உணர முடிந்தது.

ஒப்பந்த ஊழியர்கள் இல்லை என்று நிர்வாகம் செய்யும் சத்தியம் ஒருபுறம், அனைத்து வேலைகளும் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் மறுபுறம் செய்யும் நிர்வாகத்தின் கபட நாடகத்தை முறியடிக்க வேண்டியுள்ளது. நடைபெற்று முடிந்த ஒப்பந்த ஊழியர்களின் வலுவான ஆர்ப்பாட்டம் அரசின் கவனத்திற்கு சென்றுள்ளது. நடைபெற்று வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற கூட்ட தொடரில் மின்துறை மீதான மானிய கோரிக்கை விவாதம் நடக்கும் நாளில் ஒப்பந்த ஊழியர்கள் தொடர்பான அறிவிப்பை மின் துறை அமைச்சர் அறிவிப்பார் என்று நம்புகின்றோம். அதற்கான அத்தனை அழுத்தங்களையும் நாம் கொடுத்துள்ளோம்.

தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சி அமைந்ததும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று சொன்ன மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது ஆட்சி அமைத்து முதலமைச்சராக பதவியேற்ற நிலையில் அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று நம்புவோம்.

பொறுத்திருப்போம்! விழித்திருப்போம்!

**- தி.ஜெ.**





# மின்வாரிய தலைவருடன் காலநிலை பேச்சுவார்த்தை

ஒரு நீண்ட இடைவெளிக்கு பின்பு புதியதாக பொறுப்பேற்றுள்ள மின்வாரிய தலைவருடன் பணியாளர்களின் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை கடந்த 19.08.2021 அன்று நடைபெற்றது. வாரியத்தின் சார்பில் வாரிய தலைவர், வாரிய செயலாளர், தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு, துணை தலைமைப் பொறியாளர்,முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர். நமது தரப்பில் தலைவர், தோழர் தி. ஜெயசங்கர். பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன், பொருளாளர் தோழர் எம். வெங்கடேசன், துணை பொதுச்செயலாளர்கள் தோழர்கள் கே.ரவிச்சந்திரன், டி.பழனிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடிதத்தில் உள்ள கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது. வாரியத்தலைவர் நமது கோரிக்கைகளின்பால் உள்ள நியாயத்தை உணர்ந்து கொள்கை ரீதியான பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கும் இதர பிரச்சனைகளை தீர்த்து வைக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு காலக்கெடு நிர்ணயித்துள்ளார்.

1. பதவி உயர்வு, இடமாறுதல் தொடர்பான பிரச்சனையை ஏற்பட்டுள்ள சூழ்நிலையை மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.
2. பகுதிநேர பணியாளர் சம்மந்தமாக, விடுபட்டவர்களுக்கு உத்தரவு வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்க தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அவர்களிடம் கூறினார்.
3. ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்காணுவது தொடர்பாக அரசோடு பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.
4. கேங்மேன் பணியாளர்களுக்கு பிடிக்கப்படும் இனங்கள் குறித்து விரைந்து உத்தரவு வழங்க அறிவுறுத்தியுள்ளார்.
5. துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட இடங் களுக்கு பணிகள் அனுமதிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக கூறி உள்ளார்.
6. களப்பிரிவில் இளமின் பொறியாளர் 2-ம் நிலை மற்றும் இளமின் பொறியாளர் 2-ம் நிலையி லிருந்து முதல் நிலை பொறியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதன் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தலைமை பொறியாளர்/ பணியமைப்பு அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.
7. நிர்வாகப்பிரிவில் நிரப்பப்படாமல் உள்ள முதுநிலை பணித்தொகுதி அலுவலர் பதவியை நிரப்புவதோடும் ஆய்வு குழுவையும் அனுமதிக்க ஒத்துக் கொண்டார். அதே போல செயலக பிரிவில் சார்பு செயலாளர்/ஆய்வு என்ற பதவியும் நிரப்ப சம்மதித்துள்ளார்.
8. அனல்மின் தொழிலாளர்களுடைய பதவி உயர்வு மற்றும் தெர்மல் நிலைய அலவன்ஸ் குறித்தும் பேசப்பட்டது. தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.
9. ஒப்பந்த முறையில் பணிகளை செய்ய பழைய முறையில் K2 சிட் அக்ரிமென்ட் முறையில் பணிகளை விடப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு, தற்போது புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள டெண்டர் எடுத்து பணி செய்ய ஏற்படுகின்ற சிரமங்களை தெரிவித்ததும், அதை உணர்ந்து நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


பெறுநர் **நாள்: 19.08.2021**

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,
வணக்கம்

பொருள் : நிர்வாகம் - தொழிலாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண கோருதல் - தொடர்பாக

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் மீது தீர்வுகாண பலமுறை கடிதங்கள் கொடுத்தும் தீர்வுகாணப்படவில்லை. இதனால் பணியாளர்கள் மத்தியில் கடுமையான மனச்சோர்வும், வாரிய நிர்வாகத்தின் மீது அவநம்பிக்கையும் ஏற்படுத்துகிறது என தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

1. மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களை எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இடமாறுதல் செய்யப்பட்டு, குறிப்பிட்ட நபர்களை அந்த இடத்தில் பணியமர்த்தப்படுகிறார்கள். இதனால் பணியாளர்கள் தங்களது பணியை செய்வதில் சோர்வு ஏற்படுகிறது. எப்பொழுது இடமாறுதல் உத்தரவு வெளியாகும் என அச்சத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி பதவி உயர்வு இடமாறுதல் ஆகியவற்றில் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.
2. மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர பணியாளர்களில் ஒருசாரருக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கி நிரந்தரப் படுத்தப்பட்டு மீதமுள்ள சுமார் 600-க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வயது சான்று தொடர்பாக வட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து திரும்ப பெறப்பட்ட பின்பும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது கவலையளிக்கிறது. மேலும் ஏற்கனவே நிரந்தரப்படுத்தப்பட்ட பலர் ஓய்வு பெற்றுவிட்டனர்.
3. மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை வாரிய ஆணை B.P. (Chairman) No 9 (Adm Br) dt 09.01.2008 படி அடையாளங்கண்டு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/-ஐ வாரியமே நேரிடையாக வழங்கிட வேண்டும். 05.01.1998-க்கு பின்பு 09.02.2008 வரை தொடர்ந்து பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களையும் அதற்கு பின் 09. 02. 2008-க்கு பின்பு இன்று வரை பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களையும் அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்த வேண்டும். அதே போல அனல், புனல் வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களையும் அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்த வேண்டும்.
4. கேங்மேன் பணியாளர்களுக்கு சம்பளத்தில் இனவாரியாக பிரிக்கப்படும் இனங்கள் குறித்து தெளிவான, ஒரே மாதிரியான பிடித்தங்கள் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட வேண்டும். மேலும் இவர்களுக்கு விபத்து ஏற்படும் போது வாரிய ஆணை 22/ நாள் -2013 படி சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.
5. கடந்த 22.02.2018-ல் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்வாரியத்தில் பயிற்சி காலம் என்பது மூன்று மாதங்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் கேங்மேன் பணியாளர்களுக்கு இரண்டாண்டுகள் தொகுப்பூதியம் என

வரையறுத்தது, முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது. எனவே பயிற்சி காலம் மூன்று மாதங்கள் என நிர்ணயம் செய்து காலநிலை ஊதியமாக மாற்றப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு ஊர்மாறுதல் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

6. கல்வித்தகுதியில் தமிழில் தேர்ச்சி பெறாமல் இருந்தமைக்காக இந்த கொடிய கொரானா நோய் தொற்று காலத்தில் தேர்வு நடத்தப்படாத சூழலில் திருமதி ஜெயா கணக்கீட்டாளர் தேனி வட்டம் திரு.முகேஷ்சந்த் இளநிலை உதவியாளர் உடுமலை வட்டம் ஆகியோரை பணிவிடுப்பு செய்து வாரிய நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. திருமதி ஜெயா தற்போது தமிழ்வழி கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளார். அதே போல திரு. முகேஷ்சந்த் அவர்களுக்கு பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளில் கொரானா தொற்று நோய் காரணமாக கடந்த மார்ச் 2020 லிருந்து தேர்வு எழுத இயலவில்லை. இவருக்கு மீண்டும் ஒரு முறை வாய்ப்பு வழங்கி வாரிய பணியில் பணியாற்ற இருவருக்கும் அனுமதி அளித்திட வேண்டும்.
7. வேலைபளு ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும், புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்களுக்கும், Redeployment செய்யப்பட்ட கட்டுமானம் உள்ளிட்ட இடங்களுக்கும் பதவிகள் அனுமதித்திட வேண்டும்.
8. துணை மின் நிலையங்களில் இளமின் பொறியாளர் 2-ம் நிலை காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில் வாரியப்பணியில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் களப்பிரிவு பணியில் உள்ள பட்டயம் அல்லாத பணியாளர்களை 3: 1 என்ற விகிதாச்சாரத்தில் நியமிக்கப்பட வேண்டும். (அதாவது 3 தொழில்நுட்ப உதவியாளர்கள் 1 பட்டயம் அல்லாத களப்பிரிவு தொழிலாளி) என்று வாரிய விதிமுறைகள் உள்ளது. ஆனால் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் சேர்ந்தவர்களுக்கு போதிய ஆண்டு இல்லாத காரணத்தால் தகுதிகாண் அறிக்கை களப்பிரிவு ஊழியர்களுக்கு கேட்கப்படுவதில்லை. களப்பிரிவு ஊழியர்கள் சில ஆண்டுகளில் ஓய்வுபெற உள்ளதால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பளித்து துணை மின் நிலையங்களில் இரண்டாம் நிலை இளமின் பொறியாளராக பணியாற்றிட வாய்ப்பு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.
9. பட்டயம் அல்லாத இளநிலை பொறியாளர் 2-ம் நிலையிலிருந்து இளமின் பொறியாளர் முதல் நிலைக்கு பதவி உயர்வு வழங்கும் பொழுது பணி விதிகளில் குறிப்பிட்டுள்ளது போலவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே 2015 மற்றும் 2020 ஆண்டுகளில் வழங்கிய பதவி உயர்வு பட்டியலில் உயர்நீதிமன்ற தீர்ப்பை கவனத்தில் கொள்ளாமல் வழங்கி உள்ளதை நினைவுப்படுத்த விரும்புகிறோம். 2009-ல் இளமின் பொறியாளர் 2-ம் நிலையாக பணியில் சேர்ந்த பட்டயம் அல்லாத பொறியாளர்கள் பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆனால் 2019-ல் இளநிலை பொறியாளர் 2-ம் நிலையாக பணியில் சேர்ந்த பட்டய பொறியாளர்களுக்கு இளநிலை பொறியாளர் 1-ம் நிலை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
10. களஉதவியாளர், கணக்கீட்டாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர், இளநிலை உதவியாளர் (கணக்கு) ஆகிய பதவிகளில் பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்கள் உள்ளதால் கூடுதல் பணிச்சுமையோடு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். எனவே காலிப்பணியிடங்களை ஏற்கனவே அறிவித்துள்ளவாறு 2900 ITI படித்த களஉதவியாளர், 500 இளநிலை உதவியாளர், 1300 கணக்கீட்டாளர், 600 உதவிப்பொறியாளர், பணியிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதோடு, ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 5000 கேங்மேன் பணியாளர்களுக்கு பணி நியமன உத்தரவும் வழங்கப்பட வேண்டும். தமிழக அரசின் வயது வரம்பை மின்வாரியத்திலும் நீட்டிக்கப்பட வேண்டும்.
11. நிர்வாகப்பிரிவில் நிரப்பப்படாமல் உள்ள முதுநிலை பணித்தொகுதி அலுவலர் பதவியை நிரப்புவதோடு வட்ட அலுவலகங்களில் ஆய்வு செய்ய ஆய்வுக்குழுவையும் அனுமதிக்க வேண்டும்.
12. அனல், புனல், உற்பத்தி நிலையங்களில் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் அனல், மின் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட தெர்மல் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

13. மதுரை பொதுக்கட்டுமான வட்டம், குந்தா நீர் மின் உற்பத்தி வட்டம் ஆகிய இடங்களில் களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு தொடர்பாக மேற்பார்வை பொறியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தெளிவுரை கோரிய கடிதங்கள் மீது நடவடிக்கை தொடர்பாக, அதாவது விநியோக பிரிவில் கம்பியாளரிலிருந்து மின்பாதை ஆய்வாளராக பதவி உயர்வு வழங்குவதற்கு 5 ஆண்டுகள் என கால நிர்ணயம் செய்ததை கட்டுமானம் மற்றும் உற்பத்தி வட்டங்களில் பணியாற்றும் கம்பியாளருக்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கும், இந்த உத்தரவை நீட்டிக்க வேண்டும்.

14. சிறப்பு நிலை முகவர் பதவியை நிரப்புவதற்கு ஈரோடு, கோவை, திருப்பத்தூர் ஆகிய வட்டங்களில் இருந்து பெறப்பட்ட தெளிவுரை மீது ஒரே மாதிரியான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

15. பஞ்சாயத்து காசோலை தொடர்பாக கணக்கீட்டாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை கைவிட வேண்டும். கணக்கீட்டாளர்கள் சம்மந்தப்பட்ட மின் இணைப்புகளுக்கான கட்டணங்களை வாரியத்திற்கு செலுத்திய பின்பும், பதவி உயர்வு மறுப்பு, இடமாற்றம் போன்ற தண்டனைகள் வழங்கப்படுவதை கைவிட வேண்டும்.

16. பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து பதிவறை உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். இதில் பணியாற்றுகின்ற பலரும் 2009 மற்றும் 2010, 2011 ஆண்டுகளில் கருணை அடிப்படையில் பணிக்கு சேர்ந்தவர்கள் இவர்களில் பலர் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியிருந்தும் பட்டப்படிப்பு இல்லாத காரணத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு வர இயலவில்லை. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நீதிமன்றமும் 275 பணியிடங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மீதமுள்ள இடங்களை நேரடி தேர்வில் நிரப்பிக்கொள்ளலாம் என கூறியுள்ளது.

    எனவே, இதில் விருப்பமுள்ள 10 வகுப்பு தேர்ச்சி பெற்று, துறை தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு முறை வாய்ப்பு வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

17. திரு. எம்.தயாளன் மற்றும் 14 பேர் பதவி மாற்றம் சம்மந்தமான பிரச்சனையில் நீதிமன்ற தீர்ப்பு பெற்றும் வாரியம் அதை அமலாக்காமல் மேல்முறையீடு செய்து வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.

18. 900 களஉதவியாளர் பதவிகள் நிரப்பிடும் பொழுது வயது வரம்பு காரணமாக சிலர் நீதிமன்றத்தை நாடியதின் விளைவு நீதிமன்றம் அவர்களையும் தேர்வு எழுத அனுமதிக்குமாறு வாரியத்திற்கு உத்தரவிட்டது. அதன் பின் தேர்வு எழுதிய 172 பேரில் 6 பேர் மட்டுமே 900 பேரில் தேர்வு பெற்றனர். ஆனால் 894 பேருக்கு மட்டும் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது. இந்த 6 பேருக்கும் உத்தரவு வழங்கப்படவில்லை. இதில் பாதிக்கப்பட்ட திரு.ராமலிங்கம் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுத்ததின் விளைவு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை திரு. ராமலிங்கத்திற்கு பணி நியமன உத்தரவு வழங்குமாறு உத்தரவிட்டது. ஆனால் வாரியம் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. மேல்முறையீட்டை உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே திரு. ராமலிங்கத்திற்கு பணி நியமன உத்தரவு வழங்கப்பட வேண்டும். அதே போல பாதிக்கப்பட்ட இதர 5 பேருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

19. மாநில அளவிலான அனைத்து பதவிகளுக்கும் முதன்மை பட்டியல் வெளியிடப்பட வேண்டும்.

20. மின்வாரியத்திற்கு சொந்தமான மருத்துவமனைகளில் மருத்துவர், செவிலியர் பொறுப்புக்கள் நிரப்பிட வேண்டும். காடம்பாறை, மற்றும் குந்தா உள்ளிட்ட திட்டங்களில் உள்ள மருத்துவமனையில் தினக்கூலியாக பணியாற்றி வரும் 21 பேருக்கும் பணி நிரந்தரம் வழங்கப்பட வேண்டும்.

    வாரியத்தலைமை அலுவலக வளாகத்திலுள்ள மருத்துவமனையில் எக்ஸ்ரே உள்ளிட்ட கருவிகளை இயக்க தொழில்நுட்பம் வாய்ந்த பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

21. ஒப்பந்த முறையில் விநியோக பிரிவில் விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி பணிகளில் பழைய முறையில் கே2, சிட் அக்ரிமென்ட் மூலம் பணிகள் விடப்பட வேண்டும்.

புதிய முறையில் ஒப்பந்தம் எடுப்பதில் நடைமுறையில் பல்வேறு சிரமங்கள் உள்ளது. இதனால் மின்வாரிய பணியை நம்பியுள்ள திறமை வாய்ந்த ஒப்பந்த ஊழியர்கள் பணி செய்ய முடியாமல் பாதிக்கப்படுகின்றனர்.

22. களஉதவியாளர் பதவியில் முதன்மை பட்டியல் சம்மந்தமாக கடலூர் உள்ளிட்ட சில வட்டங்களில் பிரச்சனை எழுந்துள்ளது. டி.சி.எல். தேதியை எடுப்பது என்பது 21,600 ஒப்பந்த ஊழியர்களை பணியில் எடுத்தப்பொழுது பொருத்தியது சரியானது. ஆனால் இதர வழக்குகளில் வந்தவர்களுக்கு பணியில் சேர்ந்த தேதி நிர்ணயிப்பது தான் சரியாக இருக்கும். எனவே இதற்கான தெளிவுரையை வழங்க வேண்டும்.
23. தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்புகள் நீதிமன்றங்கள் வழங்கினால் அதை தேவையற்ற காரணங்களை சுட்டிக்காட்டி மேல்முறையீடு செய்வதை தவிர்க்க வேண்டும். வாரிய சட்டக்குழுவில் ஆலோசனை வழங்குவதில் தேவையற்ற காலதாமதங்களை தவிர்க்க வேண்டும்.
24. ஜெயலட்சுமி மற்றும் 18 பேர்களை பகுதிநேர பணியிலிருந்து முழுநேர பணியாளர்களாக மாற்ற சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.
25. திரு.பட்டு மின்பாதை ஆய்வாளர் சென்னை வடக்கு வட்டம் அவர்களது கல்வி சான்றிதழ் போலியானது என்ற காரணத்தால் பணி ஓய்வு பெற்று 2 ஆண்டுகள் கழித்த நிலையில் அவருக்கான ஓய்வுக்கால பணப்பயன்களை இன்னும் வழங்கப்படவில்லை.
26. ஊதிய பாகுபாடு சம்மந்தமான தெளிவான வாரிய உத்தரவுகள் இருந்தும் அதை முழுமையாக அமல்படுத்தாமல் பல ஆண்டுகளாக நீடித்துள்ள ஊதிய பாகுபாடு பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.
27. வாரிசு வேலை தொடர்பாக மரணமடைந்த ஊழியர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள் ஏதாவது ஒரு காரணத்தின் காரணமாக 3 ஆண்டுகள் கழித்து அளித்திடும் விண்ணப்பத்தின் மீது கருணை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக வாரியம் கொள்கை ரீதியாக முடிவெடுக்க வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தொழில் அமைதியை பாதுகாப்பதோடு, தொழில் உறவையும் மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**நன்றி !**

(எஸ்.இராஜேந்திரன்)
பொதுச்செயலாளர்




இந்திய தொழிற்சங்க மையம் CITU நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. Cotee யின் மாநில பொதுச்செயலாளர் தோழர்.இராஜேந்திரன், CITU மாநில பொதுச்செயலாளர் தோழர் சுகுமார், CITU மாநில தலைவர் தோழர் சௌந்தர்ராஜன். பொருளாளர் தோழர் மாலதி சிட்டிபாடி. கரூர் CITU செயலாளர் தோழர் C. முருகேசன் அவர்கள் முன்னிலையில் அயானவரம் பள்ளி நிவாரன நிதி ரூ 2000. கொடுக்கப்பட்டது. Cotee கரூர் கிளை செயலாளர் தோழர் க.தனபால். 8.9.2021 திருமணநாள் முன்னிட்டு வழங்கப்பட்டது



# இனி தொழிலாளி வர்க்கம்...!

– தி.ஜெயசங்கர்

இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு கொடுக்க வேண்டுமென்று 2001-ம் ஆண்டு முதல் முதலாளிகள் ஒன்றிய அரசை நிர்பந்தித்து வந்தனர். உலகமய, தாராளமயக் கொள்கையினால் இந்திய முதலாளிகளிடம் குவிந்த பில்லியன், பில்லியன் டாலர் பணத்தை தொழிலில் மறு முதலீடு செய்ய வேண்டிய தேவை முதலாளிகளுக்கிருந்தது. எனவே தான் அவர்கள் இந்தியாவின் நவரத்தினங்கள் என்று சொல்லக் கூடிய பொதுத்துறை நிறுவனங்களை, கபளீகரம் செய்ய முதலாளிகள் கூட்டமைப்பு முடிவு செய்தது. காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டுகால ஆட்சியில் முதலாளிகள் நினைத்தது போல் நடக்காததால், பணக்காரர்களின் கூட்டமைப்பு மோடியை தேர்வு செய்தது. மோடி ஆட்சிக்கு வந்தபின் முதலாளிகள் நினைத்தது போன்று வேகமாக பொதுத்துறையை தனியாருக்கு விடுவதையும், இந்துத்துவா அஜெண்டாவையும் இணைத்து வேகமாக செயல்பட்டு வருகிறது மத்திய ஒன்றிய அரசு.

மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் பொதுத்துறைகள் தனியாருக்கு விடப்படுவதை கண்டித்து வீரஞ்செறிந்த போராட்டங்களை தொழிலாளி வர்க்கம் செய்து வருகிறது. இந்த போராட்டங்கள் ஒன்றிய அரசுக்கு மிகப்பெரிய தலைவலியாக இருப்பதினால் ஊடகங்களின் உதவியைக் கொண்டு தொழிலாளி வர்க்கத்தை பிளவுப்படுத்த முயல்கிறது. அதாவது தனியார் துறையில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கும், அரசுத்துறையில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கும், பிளவை ஏற்படுத்தி நேர் எதிர்திசையில் நிற்க வைத்து மக்களிடம் தவறான கருத்தியலை கொண்டு செல்கிறது ஒன்றிய அரசு. குறிப்பாக மத்திய, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறைவான வேலைசெய்து அதிகமான சம்பளத்தை பெறுகின்றனர், அதே நேரம் தனியார் துறையில் அதிகமான வேலை செய்து குறைவான சம்பளத்தை பெறுகிறார்கள் என்று தொழிலாளிகளை நேர் எதிர்திசையில் நிற்க வைத்து தொழிலாளி வர்க்கத்தை மோத விடுகின்ற நிகழ்ச்சி நிரலை ஊடகங்கள் மூலமாக ஒன்றிய, மாநில அரசுகள் செய்து வருகின்றது என்பதை நாம் கூர்மையாக கவனிக்க வேண்டியுள்ளது.

அரசுத்துறைகள் மற்றும்பொதுத்துறைகள் நட்டத்திற்கு காரணம் ஊழியர்கள் தான் என்று பொது மக்கள் நம்பும் அளவிற்கு ஊடகங்கள் மூலமாக சக்தியாக பிரச்சாரம் செய்யபடுகின்றது அரசு. இதில் உண்மை இல்லை என்பதை தொழிற்சங்கமும் தொழிலாளிகளும் வலுவான எதிர்பிரச்சாரம் செய்ய வேண்டிய கட்டாய சூழலில் உள்ளோம். இது செய்யாது போனால் அரசு சொல்வது உண்மை என்று பொது மக்கள் நம்புவதைத்தவிர வேறு வழியில்லை. தமிழக மின்சார வாரியம் ரூ. 1,41,000 கோடி நட்டம் ஏற்பட்டதற்கு காரணம் தொழிலாளிகளோ, அதிகாரிகளோ, பொறியா ளர்களோ அல்ல. இதை தவறான நிர்வாகம் செய்த அதிகாரிகளும், தவறான திசை வழிக்கு இட்டுச் சென்ற அரசியல்வாதிகள் தான் என்பதை மறைத்து விடுகிறார்கள். மின்சார கொள்முதலிலும், நிலக்கரி கொள்முதலிலும் பல ஆயிரம் கோடிகள் நட்டம் ஏற்பட்டதை மூடி மறைத்து விட்டு ஊழியர்களின் சம்பளம் ரூ. 4000

- ரூ.5000 கோடிகள் கொடுத்ததன் காரணமாக ஏற்பட்ட நட்டம் என்று நிதித்துறை அமைச்சர் வெள்ளை அறிக்கையில் சொன்னது, அதை ஊடகங்கள் தொடர்ந்து போட்டுக்காட்டுவது மக்கள் மத்தியில் அரசு ஊழியர்களைப் பற்றிய தவறான கருத்தியலை உருவாக்கும் திட்டமிட்ட செயலாகும். இதன் மூலமாக மக்களையும், தனியார்துறை தொழிலாளர்களையும் அரசு ஊழியர்களுக்கு எதிராக நிற்க வைத்து அரசியல் செய்யும் நிகழ்ச்சியாகும். இதை முறியடிக்க வேண்டிய கட்டாயம் தொழிலாளி வர்க்கத்திற்கு உள்ளது.

தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை பிடிப்பதற்காக இலவசங்களை அள்ளி, அள்ளி கொடுத்த கடந்த கால ஆட்சிகள், குறிப்பாக இலவச கலர் டி.வி,மிக்ஸி, கிரைண்டர், அரிசி உள்ளிட்ட பல வகையான இலவசங்கள் மூலம் தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளது என்பதை மறந்துவிட இயலாது. இலவசமாக கொடுக்கப்பட வேண்டிய கல்வியை இலாபம் கொழிக்கும் தொழிலாக மாறியதற்கு ஆட்சியாளர்கள் தான் காரணம் ஒழிக்கப்பட வேண்டிய சாராயக் கடையை மாதர்கள் போராட்டம் செய்த போதும், உச்சநீதி மன்றம் வரை சென்று சாராயக்கடையை திறந்து ஏழை பெண்களின் வாழ்க்கையை சூறையாடியது என்பது எல்லோருக்கும் தெரியும். மணல் கொள்ளை, தாது மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கல்குவாரிகளில் கொள்ளை என்று பல்வேறு நிறுவனங்களில் ஏற்பட்ட இழப்பு, இதை வசூல் செய்திருந்தாலே தமிழக அரசுக்கு ஓராண்டிற்கு பல ஆயிரம் கோடிகள் கிடைத்திருக்கும். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். சகாயம் அளித்த அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசின் நடவடிக்கையே இதற்கு சான்று.

ஒன்றிய அரசின், தமிழக அரசின் நிதி நிலையில் சாமான்ய மக்களுக்கு, சமூக கட்டமைப்புக்கு, கல்வித்துறைக்கு வளர்ச்சி பெறாத வடகிழக்கு மாநிலங்களுக்கு நிதி உதவி செய்து ஏற்றம் பெற வைப்பதில் நமக்கு எந்த தடையும் இல்லை. அதை நாம் வரவேற்கின்றோம். அதற்காக அரசுகள் எந்த உருப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை கடந்த கால வரலாறாக உள்ளது. இதற்கு மாறாக அரசு ஏழை எளிய மக்கள் வங்கியில் சேமித்த சேமிப்புகளையெல்லாம் லலித்மோடியும், நிரவ்மோடியும், விஜய் மல்லையா போன்ற 14-க்கும் மேற்பட்ட பெரும் செல்வந்தர்கள் வங்கியில் வாங்கிய கடனை வசூல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆண்டுதோறும் முதலாளிகளுக்கு வரிச்சலுகை அளிக்காமல் வரியை வசூல் செய்வதன் மூலம் ஆண்டுக்கு ரூ.4 லட்சம் கோடியை சேமிக்க இயலும், வங்கிகளை திவால் நிலையில் இருந்து காப்பாற்ற முடியும். இது போன்ற எண்ணற்ற உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

அரசின் தவறுகளை நேரிடையாக சுட்டிக்காட்டக் கூடிய தொழிலாளி வர்க்கத்தை இரண்டாக பிரித்து மோத விடுவதன் மூலம் ஊடங்கங்களை கையில் போட்டுக் கொண்டு அரசு ஊழியர்களுக்கு எதிராக திரும்ப, திரும்ப ஒரே விஷயத்தை போட்டுக்காட்டி எதிர்மறை கருத்தியல் சிந்தனையை உருவாக்கும் அரசின் திட்டத்தை முறியடித்து தொழிலாளி வர்க்கம் முன்னேற வேண்டும். 99 ஆண்டுகள் தனியாருக்கு குத்தகை என்பது கிட்டத்தட்ட தனியார் மயந்தான், காலப்போக்கில் மக்கள் மறந்து விடுவார்கள் என்ற எண்ணத்தில் செய்யப்படும் உளவியல் சதி திட்டம் என்பதை நாம் உணர்ந்து கொண்டு மக்கள் மத்தியில் நமது நிலைபாட்டை எடுத்துச்செல்ல வேண்டும், அரசின் தவறான கொள்கைகளை எடுத்துரைக்க வேண்டும்.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் சீனாவிற்கு அடுத்த படியாக உள்ள இந்திய மக்களின் கல்வி, பொருளாதார, சமூக கட்டமைப்பு இன்றும் மாறாத நிலையில் உள்ளது. 1920-ம் ஆண்டுகளில் இந்திய சுதந்திர போராட்டம் கொழுந்து விட்டு எரிந்த போது அண்ணல் அம்பேத்கரும், பெரியாரும், இந்தியாவிற்கு சுதந்திரம் தேவையில்லை, சமூக பொருளாதார, ஜாதிய ஒடுக்கு முறையிலிருந்து தான் இந்தியாவிற்கு முதலில் சுதந்திரம் வேண்டும் என்று சொன்னார்கள். நூறாண்டுகள் கடந்த பிறகு இன்றும் இந்த நிலை மாறவில்லை. நமக்கு பிறகு ஆங்கிலேயரிடமிருந்து, பிரெஞ்சு, ஸ்பெயின் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகளெல்லாம் இன்று முன்னேறிய நாடுகளின் பட்டியலில் உள்ளது. இந்தியா மட்டும் நூறாண்டுகளாக ஆமை வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் ஆட்சியாளர்களின் திறமையின்மையும், மக்களின் மீது அக்கறையின்மையும் காரணமாகும்.

சுதந்திரத்திற்கும், மக்கள் மற்றும் தொழிலாளிகள் முன்னேற்றத்திற்கு நெருங்கிய தொடர்பிருந்தாலும் அதை மனதில் கொள்ளாமல் முதலாளிகள் முதலாளிக்களுக்கான ஆட்சியை, முதலாளித் துவத்தை தூக்கி நிறுத்துகின்ற ஆட்சியாக இருப்பதின் காரணமாக தொழிலாளி வர்க்கம் அந்த சூட்சமத்தை உணராத காரணத்தினால் இன்று தொழிலாளி வர்க்கம் பிளவுபட்டு நிற்கின்றது.

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என மார்க்ஸ் சொன்ன தத்துவம் இந்தியாவில் நடக்காது ஏனெனில் இங்கு ஜாதியாக, மதமாக, இனமாக பிளவுப்பட்டுள்ளதை நன்கு உணர்ந்த ஒன்றிய அரசு பொதுத்துறைகளை தனியாருக்கு கொடுக்கவும், 99 ஆண்டுகள் குத்தகைக்கு விடவும் துணிந்து விட்டது. இதை தொழிலாளி வர்க்கம் புரிந்து கொண்டு, நாம் பிளவுபடவில்லை என்பதை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் விதமாக அனைத்து துறைகளைச் சார்ந்த தொழிலாளிகளும் கைகோர்த்து ஒன்றிய அரசுக்கு எதிராக பிரமாண்ட போராட்டத்தை நடத்தி தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் எதிரான மத்திய ஒன்றிய அரசை, மோடி அரசை மாற்றி அமைப்பதைத் தவிர வேறு எந்த குறுக்கு வழியும் நமக்கு கிடையாது.

விழித்துக் கொள்வோம்!
ஒற்றுமை பலம் கட்டுவோம்!
ஒன்றிணைந்து போராடுவோம்!!
பொதுத்துறைகளை பாதுகாப்போம்!!!

# மின்துறை அமைச்சருடன் மின்வாரிய தொழிற்சங்க தலைவர்கள் சந்திப்பு!

மின் வாரியம் சீரமைப்பு தொடர்பாக மின்துறை அமைச்சரின் அறிவிப்பு, பணியாளர்களின் பணியிட மாறுதல் ஆகிய பிரச்சனைகள் மற்றும் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் மீது தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்திட மின்துறை அமைச்சருடன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். அதனடிப்படையில் கடந்த 24.08.2021 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்தில் அனைத்து தொழிற்சங்கங்களுடன் பேச்சுவாத்தை நடத்தினார். ஏறத்தாழ 4 மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாக "மின்னகம் செயல்பாட்டில் மேம்பாடு செய்வது சம்மந்தமாகவும், பொதுவான கோரிக்கைகள் தொடர்பாகவும், கருத்துக்களை முன்வைத்து பேசினோம்.

**(கோரிக்கைகள் தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது)**

அமைச்சர் தனது பேச்சில்

★ இடமாறுதல் பிரச்சனையில் காலிப்பணி இடங்கள் இருந்தால் மட்டுமே கோரிக்கையின் மீது தான் கவனம் செலுத்துவதாகவும்,

  பொதுவான இடமாறுலில் பணம் கொடுத்து யாரும் ஏமாற வேண்டாம் என தெரிவித்தார்.

★ கொள்கை ரீதியாக எடுக்க வேண்டிய கோரிக்கைகள் மீது முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

★ தளவாட பொருட்கள் சம்மந்தமாக விரைவில் நடவடிக்கை எடுத்து பற்றாக்குறையை போக்குவதாக உறுதியளித்தார்.

★ புதிய பதவிகள் அனுமதி குறித்து மின்வாரிய தலைவருடனும், முதல்வருடனும் கலந்து விரைவில் முடிவு எடுப்பதாக அறிவித்தார்.

★ பணியாளர்கள் மின் நுகர்வோர்களின் குறைகளை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சென்னை

நாள்: 24.08.2021

பெறுநர்
**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**ஐயா, வணக்கம்**

**பொருள் : மின்வாரியத்தில் மின்னகம் - நுகர்வோர் - மின்தடை விரைந்து சரிசெய்ய ஆலோசனை - தொடர்பாக**

தமிழ்நாடு மின்வாரியத்தில் மூன்று கோடியே பத்தொன்பது லட்சம் (3,19,00,000) மின் இணைப்புகள் உள்ளது. மின் இணைப்புகளில் ஏற்படும் மின்தடை, மற்றும் மின்பாதையில் ஏற்படும் மின்தடை, துணை மின் நிலையங்களில் ஏற்படும் மின் தடைகள் தொடர்பாக விரைந்து சரிசெய்ய எங்களது ஆலோசனையை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

1. வட்ட அளவில் மின் தடை புகார் மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.
2. துணை மின் நிலையத்தில் மின்பாதைகளில் ஏற்படும் தடையை (Breakdown) கணக்கில் கொள்ளாமல், அந்த நேரத்தில் அந்த மின்பாதையை வரும் மின்தடை புகார்களை கணக்கில் கொள்ளக் கூடாது.
3. மின் தடை புகார் மையங்களில் போதுமான களப்பிரிவு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
4. கிராமப்புற பிரிவுகளில் உபகோட்ட அளவில் மின்தடை புகார் மையம் அமைக்கப்பட வேண்டும்.
5. பியூஸ்ஒயர், காம்பவுண்ட், லக்(LUG), போன்ற முக்கியமான தளவாடப்பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.பண்டகசாலையில் இருப்பு இல்லை.
6. தரமான பின் இன்சுலேட்டர், டிஸ்க், ஓபன் டைப் செட், ஏ.பி.சுவிட்ச் போன்றவற்றை முறையாக வழங்கப்பட வேண்டும். பண்டகசாலையில் இருப்பு இல்லை.
7. மின் மாற்றிகளுக்கான ஆயில், சிலிக்காஜில், லக் (LUG), வழங்கப்பட வேண்டும். பண்டகசாலையில் இருப்பு இல்லை.
8. கேபிள் மற்றும் ACSR கம்பிகள் வழங்கப்பட வேண்டும்.
9. RMU முழுமையாக வேலை செய்வதில்லை. இதிலுள்ள பேட்டரி, Relay ஆகியவை பழுதடைந்து விட்டது. பல்வேறு இடங்களில் Sectionalzer வேலை செய்வதில்லை. R-APDRP திட்டத்தில் அமைக்கப்பட்ட RMU களுக்கு ஒப்பந்த காலம் உள்ளது.
10. பல்வேறு வட்டங்களில் மரங்களை வெட்டுவதற்கு ப்ரூனர் கருவிகள் வழங்கப்பட வேண்டும்.
11. FRP மற்றும் HRC பில்லர்களை மின்பளு நிலையாக இருக்க கூடிய இடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். மின் பளு உள்ள இடங்களில் பழைய முறையில் Open Type பயன்படுத்த வேண்டும்.

12. துணை மின் நிலையங்களில் உள்ள பழமையான பிரேக்கர்களை VCB பிரேக்கர்களாக மாற்றிப்பட வேண்டும்.

13. மின் மாற்றிகளில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட அதிகமானால் புதிய மின் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

14. மின்வாரியமே உற்பத்தி செய்த RCC (கற்காரை) கம்பங்கள் கடந்த காலங்களில் தரமானவைகளாக இருந்தது. விபத்துக்களும் இல்லை. ஆனால் கற்காரை கம்பம் உற்பத்தி செய்யும் இடங்களை மூடிவிட்டு வெளிமாநிலத்திலிருந்து வாங்கும் PSC கம்பங்கள் சரியான வலுவில்லாத காரணத்தால் காற்றடித்தலே கம்பம் கீழே விழுவதுடன் தொடர்ச்சியாக பல கம்பங்களை சேதமடைய செய்து விடுகிறது. மேலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு விபத்தும் ஏற்படுகிறது.

15. கணக்கீடு தொடர்பாக புகார் வரும் இடங்களில் மதிப்பீட்டு அலுவலர்களுக்கு கணினி வசதி அறை போன்றவை ஏற்படுத்திக் கொடுத்தால் விரைந்து நடவடிக்கை எடுக்க ஏதுவாக அமையும்.

16. வேலைபளு ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய பிரிவு அலுவலகங்களுக்கும் துணை மின்நிலையங்களுக்கும் பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஏறத்தாழ களப்பிரிவில் மட்டும் 32,000க்கு மேற்பட்ட பதவிகள் காலியாக உள்ளதால் நுகர்வோர்களுக்கு விரைந்து சேவை செய்ய இயலுவதில்லை.

17. பிரிவு அலுவலர்கள் மின்விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகளில் கவனம் செலுத்துகின்ற வகையில் அபிவிருத்தி மற்றும் விரிவாக்க பணிகளை முன்னர் இருந்தது போல செய்ய கட்டுமானப் பிரிவுகள் தொடர வேண்டும்.

18. செயற்பொறியாளரிலிருந்து மண்டல தலைமைப் பொறியாளர் வரை ஏற்கனவே உள்ள Delegation Power -ல் வழங்கப்பட்ட தொகையை நிதி நிலையை காரணம் காட்டி குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பணிகள் கடுமையாக பாதிக்கப்படும். எனவே தற்போது வழங்கப்பட்ட வாரிய ஆணை எண் 8 (கணக்குப்பிரிவு) நாள் 17.08.2021-ஐ மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நன்றியுடன்
தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

For ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய ~~பொறியாளர்~~ எஞ்சினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

பெறுநர் நாள்: 24.08.2021

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

ஐயா, வணக்கம்

பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக - தீர்வு காண கோருதல்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் மீது தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் உள்ளது. பணியாளர்கள் மத்தியில் மனச்சோர்வு ஏற்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு மின்துறை அமைச்சர் கோரிக்கைகளின்பால் தகுந்த நடவடிக்கை எடுத்து தீர்வுகாண வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

1. மின்வாரியத்தில் பணியிட விருப்ப மாறுதல் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் 20 தேதி வரையிலும் ஜுலை 1-ந்தேதி முதல் 15-ந்தேதி வரையிலும் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.அந்த விண்ணப்பங்களை பரிசீலித்து, விண்ணப்பதாரர்கள் கோரும் இடத்தில் பணி இடம் காலியாக இருப்பின் விருப்ப மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டு வந்தது.

   ஆனால் தற்போது பணியாளர்கள் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் இடமாறுதல் செய்யப்பட்டு குறிப்பிட்ட நபர்களை அந்த இடத்தில் பணி அமர்த்தப்படுகிறார்கள். இதனால் பணியாளர்கள் எப்பொழுது இடமாறுதல் உத்தரவு வெளியாகும் என்ற அச்சத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. எனவே வாரிய விதிகளின்படி பதவி உயர்வு, இடமாறுதல் உத்திரவு வழங்கப்பட வேண்டும்.

2 வேலைபளு - ஊதிய உயர்வு ஒப்பந்தப்படி புதியதாக உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும் மற்றும் துணை மின் நிலையங்களுக்கும் பதவிகள் அனுமதித்திட வேண்டும்.

   REDIPLOYMENT செய்யப்பட்ட கட்டுமானம் உள்ளிட்ட இடங்களுக்கு பதவிகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

3. ஆரம்பநிலை பதவிகளான களஉதவியாளர், கணக்கீட்டாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர், இளநிலை உதவியாளர்(கணக்கு), உதவி வரைவாளர், பண்டக காப்பாளர் 2-ம் நிலை ஆகிய பதவிகளை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

4. ஒப்பந்தம் முறையில் விநியோகப்பிரிவில் விரிவாக்கம், அபிவிருத்தி உள்ளிட்ட பகுதிகளில் பழைய முறையில் K2, அக்ரிமேன்ட் முறையில் பணிகள் விடப்பட வேண்டும்.

5. அனல் மின் நிலையங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட தெர்மல் அலவன்ஸை வழங்கிட வேண்டும்.

6. பண்டகசாலையில் களப்பணிக்கு தேவையான தளவாடப் பொருட்கள் இருப்பு வைக்க வேண்டும்.

7. அனைத்து அலுவலகங்களிலும் பழைய கணினிகளை அகற்றி நவீன புதிய தொழில்நுட்பத்துடன் கணினிகள் வழங்கப்பட வேண்டும். NETWORK முழுமையாக கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மின்வாரியத்திற்கு சொந்தமான மருத்துமனைகளில் தொழில்நுட்பாளர்கள் (TECHNICIAN) பெண் மற்றும் ஆண் செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

9. மின்வாரிய பணியாளர்கள் பணியில் சேர்ந்த இடத்திலிருந்து அதே மின் வட்டத்தில் மாறுதலில் செல்ல மூன்றாண்டுகள் என்றும்,வட்டம் விட்டு வட்ட செல்ல 5 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்ற வாரிய உத்தரவு எண் 7 நாள் 08.03.2019-ஐ ரத்து செய்யப்பட வேண்டும்.

   பழைய முறையில் உள்ளது போல பணிக்காலம் ஓராண்டு முடிந்த பின்பு விருப்ப மாறுதலில் செல்லலாம் என்ற நடைமுறை தொடர வேண்டும்.

நன்றியுடன்
தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியூ)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

For ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய ~~பொறியாளர்~~ என்ஜினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்



# கட்சி எங்கள் குடும்பத்தை பாதுகாக்கும் ரூ.40 லட்சம் மதிப்பிலான சொத்தை மார்க்சிஸ்ட் கட்சிக்கு வழங்கிய **துளசிதாஸ் தம்பதியர்**

கட்சி எங்களின் குடும்பத்தை பாதுகாக்கும் என்கிற நம்பிக்கையோடு எங்கள் சொத்தை மார்க்சிஸ்ட் கட்சிக்கு தருகிறோம் என தங்களது ரூ.40 லட்சம் மதிப்பிலான வீடு உள்ளிட்ட சொத்துக்களை மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர்களிடம் கோவை தோழர் துளசிதாஸ் தம்பதியர் வழங்கிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை தொண்டாமுத்தூர் பகுதியை சேர்ந்தவர்கள் துளசிதாஸ், மலர்க்கொடி தம்பதியினர். காடம்பாறையில் அணைக்கட்டு தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த போராடிய களப்போராளி தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் துவக்க கால தலைவர்களில் ஒருவர் தோழர் துளசிதாஸ். காடம்பாறையில் அணைக்கட்டு சங்கத்தை உருவாக்கி போராடியதற்காக பழிவாங்கும் நடவடிக்கையாக காடம்பாறையிலிருந்து தூத்துக்குடிக்கு ஊர் மாற்றம் செய்யப்பட்டார். தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளராகவும் இருந்துள்ளார். மேலும், சிஐடியுவின் மறைந்த மூத்த தலைவர் வி.பி.சிந்தன் ஆலோசனையை பெற்று அவருடன் இணைந்து தூத்துக்குடி துறைமுக சங்கத்தை சிஐடியு சங்கத்துடன் இணைத்ததில் தோழர் துளசிதாஸ் அவர்களுக்கு பெரும் பங்குண்டு. மின்வாரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றவுடன் கோவை தொண்டாமுத்தூரில் நிரந்தரமாக தங்கிவிட்டனர். தோழர் துளசிதாஸ் தம்பதியருக்கு இரண்டு மகள், மூன்று மகன்கள் உள்ளனர். இதில் மகன்கள் மனவளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் தங்களது ரூ.40 லட்சம் மதிப்பிலான வீடு மற்றும் வங்கி வைப்பு தொகை உள்ளிட்ட அனைத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உயிலாக எழுதி வைத்துள்ளனர். இதனை செவ்வாயன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், மாவட்டச் செயலாளர் வி.இராமமூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் சி.பத்மநாபன் உள்ளிட்ட தலைவர்களிடம் துளசிதாஸ், மலர்க்கொடி தம்பதியினர் மனமுவந்து வழங்கினர்.

முன்னதாக, துளசிதாஸ் தம்பதியினர் கூறுகையில், எங்களுக்கு இரண்டு மகள் மற்றும் மூன்று மகன்கள் உள்ளனர். மகன்கள் மனவளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளனர். எங்களுக்கும் வயது மூப்பு அடைந்துவிட்டது. எங்களது கடைசி நாட்களில் எங்களை பாதுகாக்க உறவுகள், அரசு என்பதை தாண்டி நான் நேசித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாதுகாக்கும் என்பதால் எங்களது சொத்துக்கள் முழுவதையும் கட்சியின் பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளேன் என்றார். உயிலை பெற்றுக்கொண்ட சிபிஎம் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், மனித குல விடுதலைக்கான உன்னத தத்துவத்தை முன்வைத்து இயங்குகிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை பாதுகாக்க வேண்டும் என நீங்கள் எண்ணுகிறீர்கள். உங்களைப்போன்றே லட்சக்கணக்கான ஊழியர்கள் இக்கட்சியின் மூச்சாக உள்ளனர். அதேநேரத்தில் உங்களையும், உங்கள் மகன்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாதுகாக்கும் என்று உறுதியளித்தார். தான் நேசித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தங்களது சொத்துக்களை வழங்கிய துளசிதாஸ், மலர்க்கொடி தம்பதியினரின் செயல் தோழர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பொதுத்துறைகளை பாதுகாக்க மின் ஊழியர்களின் மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம்!

தேசத்தின் பொதுத்துறைகளை விற்கவும், குத்தகைக்கு விடவும் முடிவு செய்த ஒன்றிய பிஜேபி அரசின் நடவடிக்கையை கண்டித்து மாநிலந்தழுவிய மின் ஊழியர் மத்திய அமைப்பின் ஆர்ப்பாட்டம் செப்டம்பர் 2-ல் நடைபெற்றது.




**சென்னை**

சென்னை கிளைகளின் சார்பாக அண்ணாசாலை தாராபூர் டவர் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் வடக்கு மண்டல செயலாளர் தோழர் ஆர். ரவிக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில நிர்வாகிகள் தோழர்கள் எம். தனலட்சுமி, எம்.சாலட், எம்.தயாளன், மாநில பொருளாளர் எம். வெங்கடேசன், துணைப் பொதுச்செயலாளர் தோழர் கே.ரவிச்சந்திரன், மின்துறை பொறியாளர் அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் கே. அருள்செல்வன், மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் தி.ஜெயசங்கர், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் நிறைவுரை யாற்றினார்.தெற்கு மண்டல செயலாளர் தோழர் எ.முருகானந்தம் நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார். இதில் கிளைச் செயலாளர்கள் தோழர்கள் எஸ். கண்ணன்- மத்தியசென்னை, சத்தியமூர்த்தி - வடசென்னை, எஸ்.தசரதன் - மேற்கு சென்னை, பண்டாரம் பிள்ளை - சென்னை தெற்கு -1, டி.அன்பழகன் - சென்னை தெற்கு -2 முத்து - பொதுக்கட்டுமானம் சென்னை ஆகிய தோழர்கள் மற்றும் 250-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கிளை தலைவரும், மாநில செயலாளருமான தோழர்கள் கே. காங்கேயன், மண்டல செயலாளர் ஆர். சிவராஜ், திட்டச் செயலாளர் எம். பாலாஜி, பொருளாளர் வி.எம். வெங்கடேசன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி**

தூத்துக்குடி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் தோழர் எஸ். அப்பாதுரை, திட்டத்தலைவர் தோழர் எம். மரியதாஸ், திட்ட செயலாளர் தோழர் குன்னிமலையான், பொருளாளர் தோழர் எம். இராமையா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோயம்புத்தூர்**

கோவை மாநகரில் 144 தடை உத்தரவை காரணம் காட்டி காவல்துறை அனுமதி மறுத்தது. ஆனால் சில கோட்டங்களில் காலையிலேயே நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். மத்திய அலுவலகம் அருகே அமைந்துள்ள எம்.ஆர்.டி. மற்றும் சிறப்பு பராமரிப்பு, பண்டகசாலை ஆகிய இடங்களில் நடைபெற்றது.

**கடலூர்**

கடலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்க மாவட்ட தலைவரும், மத்திய அமைப்பின் துணை பொதுச்செயலாளர் தோழர் டி. பழனிவேல் தலைமை தாங்கினார். இதில் திட்ட பொருளாளர் என். தேசிங்கு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சிவகங்கை**

சிவகங்கையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவரும் மண்டல செயலாளருமான எஸ். உமாநாத் தலைமை தாங்கினார். இதில் செயலாளர் தோழர் ஆர். கருணாநிதி உள்ளிட்ட திட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**இராமநாதபுரம்**

இராமநாதபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் ஆர்.குருவேல், செயலாளர் காசிநாதன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கன்னியாகுமரி**

நாகர்கோவிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் தில் திட்ட தலைவர் தோழர் பி. குணசேகரன், பொருளாளர் செல்வதாஸ் கலந்து கொண்டனர்.

**திருநெல்வேலி**

திருநெல்வேலியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய அமைப்பின் மண்டல செயலாளர் தோழர் எம். பீர்முகமது ஷா தலைமையில் நடைபெற்றது. திட்ட செயலாளரும், மாநில நிர்வாகியுமான தோழர் எஸ்.வண்ணமுத்து, பொருளாளர் நாகையன் மற்றும் கந்தசாமி உள்ளிட்ட கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி**

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செயலாளர் தோழர்கள் ஏ. கருணாநிதி, தலைவர் தோழர் வி. சதீஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல்**

திண்டுக்கல்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திட்டச் செயலாளர் எம். உமாபதி மற்றும் நிர்வாகிகள் ஆர். திருமலைச்சாமி, எஸ். சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தர்மபுரி**

தர்மபுரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை தலைவர் W.M.லெனின் மகேந்திரன் தலைமை தாங்கினார். மாநில துணை தலைவர் பி.ஜீவா, பொருளாளர் எம்.ஜெயக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மதுரை**

மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை தலைவர் ஏ.வீரண்ணன் தலைமை தாங்கினார். இதில் பொறியாளர் அமைப்பின் பொருளாளர் தோழர் கே.ஜீவாநந்தம், பொதுக் கட்டுமானம்/மதுரை வட்ட செயலாளர் தோழர் எஸ். சிக்கந்தர் பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**காடம்பாறை**

காடம்பாறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் திற்கு கிளை செயலாளர் தோழர் கே. சுகுமாறன், தலைவர் என். ஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**கோபி**

கோபியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிளை செயலாளர் தோழர் கே. பாண்டியன் அவர்கள் மற்றும் பொருளாளர் வடிவேலு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**திருச்சி**

திருச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை தலைவரும் மாநில நிர்வாகியுமான தோழர் எஸ்.ரெங்கராஜ் தலைமை வகித்தார். இதில்




செயலாளர் தோழர் எஸ்.கே. செல்வராஜ் முன்னாள் மாநில நிர்வாகி தோழர் எம். பன்னீர் செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தேனி**

தேனியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத் தலைவர் தோழர் எஸ். இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். கிளைச்செயலாளர் தோழர் ஏ. தேவராஜ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் தில் மாநில துணை தலைவர் தோழர் டி. ஸ்ரீதர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் திட்ட நிர்வாகிகள் உட்பட நூறுபேருக்கு மேல் கலந்து கொண்டனர்.

**குமரி**

குமரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திட்ட தலைவர் குணசேகரன் தலைமை தாங்கினார். தோழர் டி. செல்வதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி**

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திட்ட தலைவர் தோழர் கே. விஜயகுமார் தலைமை தாங்கினார். கிளை செயலாளர் தோழர் சீனிவாசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பெரம்பலூர்**

பெரம்பலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் திற்கு மண்டலச் செயலாளர் தோழர் எஸ். அகஸ்டின் தலைமை தாங்கினார். கிளை செயலாளர் தோழர் எம். பன்னீர் செல்வம், பொருளாளர் தோழர் கண்ணன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்**

தஞ்சாவூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணைத் தலைவர் ஆர்.ராஜாராமன் தலைமை தாங்கினார். கிளை செயலாளர் தோழர் பி. காணிக்கைராஜ் மற்றும் மத்திய அமைப்பின் முன்னாள் பொருளாளர் தோழர் து.கோவிந்தராஜு உள்ளிட்ட

நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்**

விருதுநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திட்டத் தலைவர் தோழர் எஸ். சௌந்தர பாண்டியன் தலைமை தாங்கினார். மாநில துணைத் தலைவரும் செயலாளருமான தோழர் வி.சந்திரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**குந்தா**

குந்தாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் பிரேம் பிரசாத் தலைமையில் நடைபெற்றது. இதில் திட்ட தலைவர் எஸ். முரளிதரன், செயலாளர் எம். முரளிதரன் நிர்வாகிகள் தோழர்கள் வனஜா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்**

நாமக்கல்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிளை செயலாளர் தோழர் எம்.கோவிந்தராஜ், பொருளாளர் முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பத்தூர்**

திருப்பத்தூர் வட்டத்தில் நான்கு கோட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கிளை தலைவர் தோழர் சி.அருள், செயலாளர் எஸ். சிவசீலன் பொருளாளர் எஸ்.ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம்**

விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் சிவசங்கரன் தலைமை தாங்கினார். தோழர்கள் மாநில துணை தலைவர் கே. அம்பிகாபதி, பொருளாளர் ஆர்.அருள், சிஐடியூ மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

**செங்கற்பட்டு**

செங்கற்பட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிளை தலைவர் தேவகுமார் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் என். பால்ராஜ் மற்றும் திட்ட நிர்வாகிகள் தோழர் மயில்வாகனன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**நாகப்பட்டினம்**

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் எஸ். சிவராஜன் தலைமை தாங்கினார். திட்ட செயலாளர் தோழர் எம். கலைச்செல்வன், பொருளாளர் ஆர். செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்**

திருவாரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் சகாயராஜ் தலைமை தாங்கினார். திட்ட செயலாளர் தோழர் இராஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திட்ட செயலாளர் தோழர் கே.நடராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர்**

மேட்டூர் திட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திட்டச் செயலாளர் தோழர் கே. சுந்தர்ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சேலம்**

சேலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் பி. கருப்பண்ணன் தலைமை தாங்கினார். திட்ட செயலாளர் தோழர் வி. ரகுபதி, பொருளாளர் ஆர். பழனிச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**ஈரோடு உற்பத்தி**

ஈரோடு உற்பத்தியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிளைச் செயலாளர் பி.கே. சிவக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வேலூர்**

வேலூர் திட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் தோழர் கோவிந்தராஜ் மற்றும் செயற்குழு உறுப்பினர் ஜெகன், பொறியாளர் அமைப்பின் தலைவர் தருமன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**ஈரோடு**

ஈரோடு திட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில செயலாளர் ஜோதிமணி, கிளை பொருளாளர் தோழர் ஸ்ரீதேவி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




நாகை மாலி
கீழ்வேளூர்

**சட்டமன்றத்தில் மின்துறை தொடர்பாக கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து பேசுமாறு மார்க்சிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தோழர்கள் நாகை மாலி மற்றும் எம். சின்னதுரை ஆகியோரை சந்தித்து கோரிக்கை அளிக்கப்பட்டது**


எம்.சின்னத்துரை
கந்தர்வகோட்டை

1. கேரள சட்டமன்றத்தில் மின்சார சட்டதிருத்த மசோதா 2021-ஐ நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடாது என தீர்மானம் நிறைவேற்றியதைப் போல தமிழக சட்டமன்றத்தில் கேரளாவை போல தீர்மானம் நிறைவேற்றப்படுமா?

2. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் முழுவீச்சில் உற்பத்தியை தொடங்கவும், மின் உற்பத்தி திட்டங்களை விரைந்து முடித்து மின் உற்பத்தி செய்ய காலம் நிர்ணயிக்கப்படுமா?

3. மின் வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு பணி நிரந்தரப்படுத்த நடவடிக்கை உள்ளதா? ஏனெனில் வர்தா, ஒக்கி, கஜா,தானே, சென்னை பெருவெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் காலத்தில் விரைந்து பணியாற்றி சேவை செய்தவர்கள் இவர்கள்.

4. மின் வாரியத்தில் அவுட்சோர்சிங் மற்றும் ஒர்க்கஸ் காண்ட்ராக்ட் முறையில் பணிகளை செய்து வருகிறார்கள். மின் உற்பத்தி உள்ளிட்ட பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஒப்பந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்தக் கூடாது என தமிழக அரசின் அரசாணை 950 நாள் 08.08.1990-ல் உள்ளது. எனவே இந்த பகுதியில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை உள்ளதா?

5. கடந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்டு கேங்மேன் பணியாளர்களில் 9613 பேருக்கு மட்டுமே பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது.

   மீதமுள்ள 5000 பேருக்கு பணி நியமன உத்தரவு வழங்கப்படுமா?

6. மின்வாரியத்தில் 52,000 காலிப்பணியிடங்கள் உள்ளதாக அறிகிறோம். இதில் கடந்த ஆட்சியில் 2900 ஐடிஐ தொழில் நுட்பம் படித்தவர்கள், 1300 கணக்கீட்டாளர்கள், 600 உதவி பொறியாளர்கள், 500 இதர நிலை உதவியாளர்(கணக்கு) போன்ற பதவிகளை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

   தற்போது இந்த பதவிகள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

7. மின்வாரிய ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஊதிய உயர்வு குறித்து ஏதெனும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

## 17.08.2021 அன்று மாநிலம் முழுவதும் ஒப்பந்த ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்










தூத்துக்குடி கிளை ஆண்டு பேரவை 28.08.2021




35

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 09.09.2021

## 17.08.2021 அன்று மாநிலம் முழுவதும் ஒப்பந்த ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர்




ஈரோடு



சிவகங்கை

Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian